# இந்து ஒளி

# HINDU OLI

அகில இலங்கை இந்து மாமன்றம்
காலாண்டிதழ்

Quarterly of
All Ceylon Hindu Congress

தீபம் 3 சுடர் 1



மாமன்றத்திற்கு வருகை தந்திருந்த சுவாமிஜி சாந்தானந்த சரஸ்வதி அவர்கள் தெய்வீக உரை நிகழ்த்துவதையும், அங்கு வந்திருந்தோரில் ஒரு பகுதியினரையும் காணலாம்







உ

# பஞ்ச புராணங்கள்

*திருச்சிற்றம்பலம்*

## தேவாரம்

### திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது.

மதிநுதல் நங்கையோடு வடபாலிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொண்றை மாலைமுடி மேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய் களான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

## திருவாசகம்

### மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது

புகவே தகேனுனக் கன்பருள் யான்
என் பொல்லா மணியே
தகவே என்னையுனக் காட் கொண்ட
தன்மை யெப்புன் மையரை
மிகவே யுயர்த்தி விண்ணோரைப்
பணித்தி யண்ணா அமுதே
நகவே தகு மெம்பிரா னென்னை
நீ செய்த நாடகமே.

## திருவிசைப்பா

### கருவூர்த்தேவர் அருளியது

பவளமால் வரையைப் பனிபடர்ந்தனையதோர்
படரொளி தரு திரு நீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்று போற்குழல் திருச்சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுட்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல் மெழுகு ஒக்கின்றதே.

## திருப்பல்லாண்டு

### சேந்தனார் அருளியது

தாதையைத் தாளற வீசியது சண்டிக்கு
அண்டத் தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற் கோயிலும்
போனகமு மருளிச்
சோதி மணி முடித்தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்திற்குப் பரிசளித்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

### சேக்கிழார் சுவாமிகள் அருளியது

நன்மைபெரு கருள் நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னு திருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும் பொழுதில்
"உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

*திருச்சிற்றம்பலம்*

உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் 3 சுடர் 1
வெகுதானிய வருடம் ஐப்பசி - மார்கழி

*வழிபாட்டிற்கும், நன்றிக்கடன் செலுத்துவதற்கும் விசேடமாக வகுக்கப்பட்ட தினம் தைப்பொங்கல் தினமாகும். சூரியசக்தி மூலம், குறிப்பாக விவசாய அறுவடைகள் மூலம் கிடைக்கின்ற நன்மைகளை மெச்சி, சூரிய உருவில் காணப்படும் தெய்வீக சக்திக்கு பொங்கல் படைத்து, நன்றி செலுத்தி பொங்கல் தினத்தில் எல்லாம் வல்ல ஆண்டவனை வணங்கி இந்துக்கள், அவர்களின் எதிர்காலம் நலன்பெற தெய்வீக அருள்வேண்டி நிற்பர்.*

*சுதந்திரமும், சமத்துவமும் உள்ள பிரஜைகளாக வாழ, அடிப்படை உரிமைகளைப் பெற தெய்வீக அருளை இன்னும் எதிர்பார்த்துக் கொண்டு பதினைந்து வருடங்களுக்கு மேல் தங்கள் சொந்த நாட்டில் அகதிகளாக வாழும் இலங்கைவாழ் இந்துமக்களின் துர்ப்பாக்கிய நிலை இன்னும் தொடர்கின்றது.*

*தெய்வீக சக்திக்கு பொங்கல் படைத்தலிலும் - சமாதானமும் சுதந்திரமும் சமத்துவமும் மறுக்கப்பட்டு சொல்லொணாத் துயருடன் வாழும் எங்கள் சகோதர, சகோதரிகளின் விமோசனத்திற்காக எல்லாம் வல்ல ஆண்டவனை வழிபடுவதிலும் - இத்தைப் பொங்கல் தினத்தன்று ஈடுபடுமாறு (இந்நாட்டின் இந்துமத நிறுவனங்களினதும் அறக்கட்டளைகளினதும் ஒன்றியமான) அகில இலங்கை இந்து மாமன்றம், இந்நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் வாழும் இந்து மக்களுக்கு இத்தைப் பொங்கலை முன்னிட்டு பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றது.*

*வசதி குறைந்த சிறுவர்களுக்காக அகில இலங்கை இந்து மாமன்றம் ஓர் இலவச விடுதியை கடந்த பத்து மாதங்களாக நடத்தி வருகிறது. வேறு வழிகளிலும் மாமன்றம் அதன் சமூக நலப் பணிகளைத் தொடரத் திட்டமிட்டு வருகின்றது. இந்த துர்ப்பாக்கிய காலகட்டத்தில் தேவையானோர்களுக்கு உதவி செய்வதில் மாமன்றத்துடன் இணைய விரும்புபவர்கள் இணையலாம். மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை.*

*ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் எல்லோருக்கும் - ஒவ்வொருவருக்கும் அருள் புரிய நாங்கள் பிரார்த்தித்து நிற்கிறோம்.*

# ஞான விளக்கம்

சுவாமி தேஜோமயானந்தா

கைலாசபர்வதம் : இமாலயத்தில் கைலாசபர்வதம் இருப்பதாக ரிஷிகள் குறிப்பிடுவது வெறும் கற்பனை அல்ல. மற்றப் பேருண்மைகளை அவர்கள் எடுத்துக் கூறி இருப்பதைப் போல, இதையும் அவர்கள் கண்டு அனுபவித்துத்தான் சொல்லி இருக்கிறார்கள். அதனால் நான் இதை உறுதியாகவே நம்புகிறேன். அவர்கள் பார்த்ததை நாம் ஏன் பார்க்க முடியாது? பார்க்க முடியும். ஆனால் மிகுந்த மனத்தூய்மை கொண்ட மேன்மையான பக்தர்கள்தாம் பார்க்க முடியும்! கைலாசபர்வதம் என்ற மலை உருவத்தைத்தான் நாம் பார்க்கிறோம். ஆனால் அவர்களோ அதை ஈசனின் உறைவிடமான தெய்வலோகமாகவே கருதுகிறார்கள். மேலும் கைலாச யாத்திரை என்பது நாம் சாதாரணமாக மேற்கொள்ளும் யாத்திரையைப் போன்றது அல்ல. அது ஆன்மிக உணர்வு பொங்கித் ததும்பும் புனித யாத்திரை. அதை மேற்கொள்ளத் திட்டமிடும்போது அவர்களுடைய உள்ளங்களில் கைலாசம் பற்றிய தூய உணர்வுகள் தெய்வீக உணர்வுடன் நிறைந்து விடுகின்றன. பல மாதங்களாக அதற்காக அவர்கள் உடம்பையும் உள்ளத்தையும் பக்குவம் செய்து கொள்கிறார்கள். அவாகள் அந்த யாத்திரையின் வழி நடக்கும் போது, அவர்களுடைய உள்ளம் கைலாசத்தின் மீதே பற்றுக் கொண்டு, அந்த ஒரே தெய்வீக நோக்கத்தில் கலந்து விடுகிறது. ''நாம் எதை ஆழ்ந்து சிந்திக்கிறோமோ அதுவாகவே நாம் ஆகிவிடுவோம்'' என்பது தான் தத்துவம். ஆகவே மனத்தில் பர்வதம் பற்றிய சிந்தனை மறைந்து, பரம்பொருளான சிவம் பற்றிய உணர்வே நிறைந்து விடுகிறது. பக்தனின் உள்ளம் தூய்மை அடைந்து ஈசனைப் பற்றிய சிந்தனை ஒன்றை மட்டும் மேற்கொண்டு கலந்து விடுகிறது. இதுவே கைலாச யாத்திரை நமக்கு அளிக்கும் பயன்.

அர்த்த நாரீசுவரத் தத்துவம் : சிவம் என்ற ஆண் உருவம் தூய்மையான ஞானத்தையும், மெய்யுணர்வையும் காட்டுவது. சக்தி என்ற பெண் உருவம் அஞ்ஞானத்தையும் தமஸையும் உணர்த்துவது. சக்தி இன்றிச் சிவம் இயங்க முடியாது. சிவமே சக்தியின் வழியாக இயங்கி எல்லாவற்றையும் நடத்துகிறது. சிவ – சக்தி என்ற இணைந்த அமைப்பின் வடிவமே அர்த்தநாரீசுவர தத்துவம். இதுவே படைப்பின் ஆதாரம். இப்படிப் பொருளும் சக்தியும் இணைந்த இந்த ஆன்மீகச் சக்தியே பிரம்மம் என்று சொல்லப்படுவது. அவை தனித்தனியே ஆனாலும் பிரிக்க இயலாதவை. இரண்டும் ஒன்றினால்தான் உலகமே இயங்குகிறது. வெளி உலகத்தைப் பற்றிய உணர்வும், தன்னையே பற்றிய விழிப்பும் சேர்ந்துதான் ஒரு படைப்பை முழுமையாக்குகின்றன. இந்தத் தத்துவத்தை உணர்த்துவதே அர்த்தநாரீசுவர வடிவம். உலகம் முழுவதும் இப்படிப் பொருளும் சக்தியும் சேர்ந்த நிலையில்தான் செயல்படுகிறது. ஆனால் நாம் பரம்பொருளின் உண்மையை உணரும்போது இந்த இரண்டு வடிவங்களுமே மறைந்து போய் விடுகின்றன.

சிவலிங்கத் தத்துவம் : கடவுள் எங்கும் நிறைந்தவர் – எல்லாவற்றிலும் இருப்பவர். இந்தப் பண்புகளாலேயே அவருக்கு ஓர் உருவமோ வடிவமோ இல்லை என்று நாம் கருதுகிறோம். இப்படி ஓர் உருவமோ, வடிவமோ இல்லாவிட்டாலும் ஈசன் நமக்கு அருளுவதற்காக வரும்போது குணங்களுடனும் உருவத்துடனும் தோன்றுவதாகவே நாம் நினைக்கிறோம். ஈசுவரனாக நாம் வழிபடும் வடிவம், இந்த உருவம் இல்லாத பண்பையும், உருவம் உள்ள பண்பையும் ஒன்றாகச் சேர்த்து அமைந்தது. அதற்கு வடிவம் இருப்பதால் அது உருவ வழிபாட்டுக்கு உரியது. சாதாரணமாகத் தலை, கை, கால் போன்ற உறுப்புகள் இல்லாததால் அது உருவமில்லாத வழிபாட்டுக்கும் உரியது. இப்படிச் சிவலிங்கத் தத்துவமே ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளை உணர்த்துவதாக அமைந்துள்ளது. லிங்க வடிவம் இதனால் ஓர் அடையாள பூர்வமான உருவமாகவே கருதப்படவேண்டும். இதுவே இதன் தனித்தன்மை. இப்படி நிர்க்குணம் – சகுணம் என்ற இரண்டு பண்புகளையும் ஒன்றாகக் கொண்டிருப்பதனால்தான் லிங்கம் என்ற தோற்றம் பரம்பொருளின் சொரூபமாகக் கருதப்பட்டு வழிபடப்படுகிறது.

*(நன்றி : ஞானபூமி – டிசெம்பர் 1993)*

# புதுமைக்கும் வழிகாட்டிகளாகப் பண்டே நின்றொளிரும் பண்பாட்டுச் சுடர்கள்

**சுடர் - 3**

**(ஆ. குணநாயகம்)**

*உண்டாலம்ம இவ்வுலகம்*
*தமக்கென முயலாப்*
*பிறர்க்கென முயலுநர் உண்மை யானே*

கடலிற் கலஞ்செலுத்திப் பிறநாட்டுக்குச் சென்று வாணிகஞ் செய்தலும், மீன் பிடித்தலும், முத்துக் குளித்தலும் பண்டைப் பாண்டியர் மேற்கொண்டிருந்த தொழில். பாண்டி வேந்தரும் இத் தொழிற்கு வேண்டும் ஆதரவு புரிந்து வந்தனர். தமிழரசர் கடாரம், சாவகம், ஈழம் முதலிய நாடுகளுக்குக் கலத்திற் சென்ற வரலாறுகள் உண்டு. அவ்வாறு செல்லும் கலங்களில் அரச குமரரும் செல்லும் வழக்கம் இருந்தது. இவ்வாறு சென்று வந்த இளம் அரச குமரருள் ஒருவர் இளம்பெரும் வழுதி என்பவர். இவர் இளமையிலேயே கற்பவை கசடறக் கற்று, அக்கல்விக்குத் தக ஒழுகும் மேம்பாடுடையவர். பெருமை மிக்க பாடல்களைப் பாட வல்ல ஆற்றல் உடையவர். அவர் அவ்வப்போது பாடிய பாட்டுக்கள் சான்றோர்களாற் பெரிதும் போற்றப்பட்டு வந்தன. அத்தகைய நலம் வாய்ந்த குமரன் கலமூர்ந்து செல்கையில், கலம் கவிழ்ந்து மாய்ந்து விட்டனர். அதனால், அவரைச் சான்றோர் "கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி" என்று குறித்தனர். கடலுள் மாய்வதற்கு முன்னர், அவர் சான்றோர் சான்றாண்மையை வியந்து கூறிய ஒரு பாடலே எமது பார்வைக்காக இவண் எடுத்துக் கொள்வது. இதன் பொருளை முதற்கண் பார்ப்போம்:

நிலையில்லாத இவ்வுடம்பும், அழியாது நிலைபெற்று நிற்கின்றதே. இது எதனால் ஏற்பட்டுள்ளது என்று கேட்பீராகில், அதற்கு விடை உண்டு. தமது வாழ்நாளின் கண்ணே தமக்கே மாத்திரமாகப் பாடுபடாது தமது முயற்சியும் உழைப்பும் மற்றையோர்க்கும் பயன்படும் வண்ணம் வாழ்பவரின் பயனாகவே இவ்வுலகம் நிலைத்து நிற்கின்றது அல்லது அழிந்தே விடும்.

பிறர்க்கென முயலும் பண்புடையோராகிய அத்தகையோர் பால், அதற்குத் தக்கவாறு, ஏனைய பல சிறப்பு இயல்புகளும் அமைந்துள்ளன.

தேவாமிர்தம் என்பது எமது முயற்சியாற் பெற முடியாததொன்று. ஆனால், ஒரே வழி, அது தவப் பயனாகவோ, அன்றித் தெய்வத் திருவருளினாலேயோ, கிடைக்கப்பெற்றால் அதை உண்பவர் மரணமில்லாச் சிரஞ்சீவி நிலையை எய்துவர். அவ்வாறான அமிர்தம் தற்சமயமாகக் கிடைத்து விட்டால், இங்கு கூறப்படும் சான்றோர்கள் அது இனியது என்று, அதனைத் தாமாகவே தனியாக உண்ணமாட்டார்கள். மற்றையோருடன் பகிர்ந்தே உண்பர்.

எவரோடும் வெறுப்புக் கொள்ள மாட்டார்கள், அதாவது யாவரோடும் அன்புடையவராக இருப்பர். பிற நன்மக்கள் அஞ்சும் பழி பாவச் செயல்களுக்குத் தாமும் அஞ்சுவர். அவ்வாறான நிலைமைகளை எப்படியெல்லாம் நீக்க முடியுமோ, அங்கங்கெல்லாம் தளராது தமது கவனத்தையும் முயற்சிகளையும் ஈடுபடுத்துவர். மெய்ப்புகழ் எய்தக் கூடிய ஒரு நிலைமை ஏற்படுமாயின், அதற்காகத் தமது உயிரையும் கொடுப்பதற்குப் பின் நில்லார். பழிபாவங்களோடு கூடியதாகிய ஒன்றாயின், அதற்குப் பரிசிலாக உலகமே கிடைக்கும் என்று கூறப்படினும், அதனை ஏற்கமாட்டார்கள். வாழ்க்கையிலே ஒருவர்க்கு வெற்றியை ஈட்டித் தரக்கூடிய ஒரு சிறந்த அம்சம் அவரது வினைசெயல் திறம். ஒருவர் தான் செய்ய வேண்டிய செயலை எவ்வளவு சிறப்பாகச் செய்து முடிக்கின்றாரோ, அவ்வளவுக்கு அவருக்கு நற்பயன் உண்டு. முன்பின் ஆராயாது ஒரு செயலைச் செய்யும் போது பின்பு தமது பிழையை உணர்ந்து கவலைப்படவேண்டிய ஒரு சந்தர்ப்பம் நிகழும். ஆனால், இப்பாடலில் குறிக்கப்பட்டுள்ள சான்றோர் அப்படியான ஒரு சந்தர்ப்பம் ஏற்படக்கூடியதாகச் செயலாற்ற மாட்டார்கள். நன்கு ஆலோசித்தே செய்வர்.

இத்தனை பண்புகளுமுடைய பெரியோர்கள், தமக்கென மாத்திரம் வாழாது, பிறர்க்குரியராகவும் வாழ்வதன் காரணமாகவே இவ்வுலகம் நிலைத்து நிற்கின்றது.

இப்பொழுது பாடலைப் பார்ப்போம் :

*"உண்டாலம்ம இவ்வுலகம், இந்திரர்*
*அமிழ்தம் இசைவதாயினும் இனிதெனத்*
*தமியர் உண்டலும் இலரே; முனிவலர்;*
*துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்*
*புகழெனின் உயிரும் கொடுக்குனர்; பழியெனின்*
*உலகுடன் பெறினும் கொள்ளலர், அயர்விலர்*
*அன்ன மாட்சி யனைய ராகித்*
*தமக்கென முயலா நோன்றாட்*
*பிறர்க்கென முயலுனர் உண்மையானே"*

*–புறநானூறு 182*

லூயி பாஸ்ரர் (Lovis Pasteur) என்பவர் 1822ஆம் ஆண்டில் பிறெஞ்சு தேசத்திலே பிறந்தவர். அவர் பின்பு சிறந்தவோர் விஞ்ஞான ஆராய்ச்சியாளராகத் திகழ்ந்தார். 73 ஆண்டுகள் சேவை செய்து இவ்வுலகை விட்டு நீங்கினார். அவருடைய காலத்திலே அந்நாட்டின் கண் உள்ள சிறந்த பெரியோர்களின் வரிசையைத் தேர்ந்தறியும் பொதுசன வாக்கெடுப்பு நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டது. வீராதி வீரரான நெப்போலியன் அவ்வரிசையில் 5ம் இடமே பெற்றார். முதலிடம் பெற்றது எமது லூயி பாஸ்ரர். அவர் தனக்கென வாழாது, பிறர்க்குரியனாக வாழ்ந்து வந்த காரணத்தினாலேயே அம் முதலிடத்தில் வைத்து எண்ணப்பட்டார்.

இப் பெருமானுடைய கண்டுபிடிப்புக்கள் மனித சுகாதாரத் துறையிலும், வைத்தியத் துறையிலும் அளப்பரிய சாதனைகளைச் செய்துள்ளது. நுண் கிருமிகளால் வரப்படும் விளைவுகளை மிகவும் நுணுக்கமாகவும் அற்புதமாகவும் கண்டு பிடித்து மனித குலத்திற்கு உதவினார்.

அவர் ஈட்டிய சிறந்த சாதனைகளில் ஒன்று விசர் நாய் கடிக்குரிய சிகிச்சையாகும். அந்தக் காலத்தில் விசர் நாயால் கடிக்கப்படும் ஒருவர் இரண்டு, மூன்று கிழமைகளில் மரணமே எய்துவர். வேறு விமோசனமே கிடையாது. இந்நிலைமை லூயிபாஸ்ரரின் மனதை வெகுவாக உறுத்தியது. இதற்கு ஒரு விமோசனம் காணலாமா என்று எண்ணி, ஆக வேண்டிய முயற்சியில் ஈடுபட்டார். பல விசர் நாய்களைத் தேடிப்பிடித்துக் கூட்டில் அடைத்து வைத்தார். பின்னர் ஆராய்ச்சி ஆரம்பமாயிற்று. விசர் நாயின் எச்சில் மூலமாகவே மனித உடம்பில் விஷம் பரவுகின்றது என்பதை உணர்ந்தார். எனவே, நாயின் எச்சில் பரிசோதிக்கப்பட வேண்டியதாயிற்று. ஆனால், எச்சிலை எடுப்பது எப்படி ? இதனை நன்கு யோசித்து, வேறு வழி இல்லாதமையால், ஒரு சிறு குழாய் வழியாகத் தானே அவ் விஷ பதார்த்தத்தை உறிஞ்சி எடுத்துக் கொண்டார். அச் சந்தர்ப்பத்தில், அதிலிருந்து ஒரு சின்னஞ்சிறிய பகுதி அவரது உடம்பினுட் சென்று அவர் இறந்திருக்கவும் கூடும். ஆனால் பிறர் நலனுக்காக மேற் கொண்டுள்ள வேலையை எதுவிதகாரணம் கொண்டும் நிறுத்திக் கொண்டாரில்லை. தானே வரைந்து கொண்ட முறைப்படி ஆராய்ச்சியை நடாத்தி, ஈற்றில் வெற்றி கண்டார். விசர் நாய் கடித்த ஒருவர் இப் பெருமான் காட்டி வைத்துள்ள முறைப்படி ஊசி மருந்தை ஏற்றிக் கொண்டால், சுகம் அடைந்து விடுவார். விசர் நாய் கடித்தவர்க்கென ஒரு உலகம் இருக்குமென்றால், அவ்வுலகம் இப்போது அழியாமல் நிலைபெற்று நிற்கின்றது. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனான லூயி பாஸ்ரர் இருந்தமையினாலேயே இது சாத்தியமாயிற்று.

தனது வாழ்க்கையிலே மூன்று கட்டங்கள் அமைந்து இருந்தன என்பதாக அவர் கூறுவர். உறுதியான மனத்திட சங்கற்பம், அயரா முயற்சி, மேன்மை மிகு வெற்றி. இவற்றை நாமும் எமது வாழ்வின் குறிக்கோள்களாகப் பின்பற்றுவோமாக!

---

## கந்த கோட்டன்

சந்திரரும் சூரியரும சாராத
உலகிலுமே சதாசிவனாய் ஒளியானான்
செந்துவர்வாய் பால்மேனி சேவடிகள்
தாங்கியொரு சித்திரமாய் அழகேந்தி
மந்திரமும் தந்திரமும் மறக்காத
மனிதகுல மேம்பாட்டின் மகிமைக்காய்
கந்தகோட்டத் தெழுந்தருள் முத்துக்குமரா
கடைக்கண்ணால் நோக்குவாய் என் கண்குளிர

*(நன்றி: முருகானந்தம்)*

# சிவாலயங்களின் அமைப்பும் வழிபாட்டு முறைகளும்

இறைவன் எழுந்தருளிய இடத்தைக் "கோயில்" எனவும், "ஆலயம்" என்றும் அழைக்கிறோம். கோயில் என்ற பெயர் கோ + இல் எனப்பிரிந்து, "கோ" இறைவன் என்றும், 'இல்' இருப்பிடம் என்றும் பொருள்படும். அதாவது கோயில் என்பது இறைவனின் இருப்பிடம் என்ற பொருள் குறிக்கும். ஆலயம் என்பது ஆ + லயம் எனப் பிரிந்து 'ஆ' ஆன்மா என்றும் 'லயம்' சேருவதற்குரிய இடம் என்றும் பொருள்படும். அதாவது ஆலயம் என்பது ஆன்மா சேருவதற்குரிய இடம். ஆணவ மலம் அடங்குவதற்குரிய இடம் என்றும் பொருள் கொள்ளலாம்.

கடவுள் என்னும் ஒபயர் மனம், மொழி, மெய் ஆகியவற்றைக் கடந்து நிற்பதாகும். இதைத்தான் அப்பர் அடிகளார்,

*"ஆட்டு வித்தால் ஆரொருவர் ஆடாதாரே,*
*அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே,*
*ஓட்டு வித்தால் ஆரொருவர் ஓடாதாரே,*
*உருகு வித்தால் ஆரொருவர் உருகாதாரே,*
*பாட்டு வித்தால் ஆரொருவர் பாடாதாரே,*
*பணி வித்தால் ஆரொருவர் பணியாதாரே,*
*காட்டு வித்தால் ஆரொருவர் காணாதாரே,*
*காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே,"*

என விளக்குகிறார்.

## ஆலய அமைப்பு :

ஆகமங்களில் விதிக்கப்பட்ட ஆலய அமைப்பு இரண்டு வகைப்படும். ஒன்று நம் உடல் அமைப்பை யொட்டியது. மற்றொன்று நம் இதய அமைப்பையொட்டியது. கோயில்கள் நம் உடம்பு போல் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை "க்ஷேத்திரம் சரீரப் பிரஸ்தாரம்" என்பர். இதனைத் திருமூலர்,

*உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்*
*வள்ளற் பிரானுக்கு வாய்க்கோ புரவாயில்*
*தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"*

என்கிறார்.

ஆகம விதிப்படி ஆலயங்கள் கர்ப்பக்கிரகம், ஒன்று முதல் ஐந்து பிரகாரங்களுடனும் கூடிய ராஜகோபுரம், பலிபீடம், கொடிமரம், யாகசாலை, நந்தி முதலியவற்றுடன் விளங்கும்.

பிண்டமாகிய நம் உடலில் தலை, கழுத்து, மார்பு, நாடி, பாதம் என ஐந்து பிரிவுகள் உண்டு. புருஷவடிவமாக விளங்கும் சிவாலயத்தை நம் உடலோடு ஒப்பிடும்போது,

| | | |
|---|---|---|
| 1. | கர்ப்பக்கிரகம் | தலை |
| 2. | அர்த்தமண்டபம் | கழுத்து |
| 3. | மகாமண்டபம் | மார்பு |
| 4. | யாகசாலை | நாடி |
| 5. | கோபுரம் | பாதம் |

உடலில் வாய், நாக்கு, அண்ணாக்கு, பஞ்சேந்திரியங்கள், இருதயம், உயிர் என்பன உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | ஆலயம் | உடல் |
| 2. | கோபுரம் | வாய் |
| 3. | நந்தி | நாக்கு |
| 4. | துவஜஸ்தம்பம் | அண்ணாக்கு |
| 5. | தீபங்கள் | பஞ்சேந்திரியங்கள் |
| 6. | கர்ப்பக்கிரகம் | இதயம் |
| 7. | சிவலிங்கம் | உயிர் |

உடலில் அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் போலவும் தூல சரீரம், சூஷ்ம சரீரம், குண சரீரம், கஞ்சுக சரீரம், காரண சரீரங்கள் போல ஐந்து பிரகாரங்களும், ஐந்து சபைகளும் உள்ளன. உடலில் உள்ள ஆறு ஆதாரங்கள் போல கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம் முதலானவை உள்ளன. மேலும் இவ்வாலயங்கள் பொதுவாக செங்கல், காரை, கம்பி போன்ற ஏழு வகைப் பொருள்களால் ஆனது. நம் உடலும் தோல், இரத்தம்,நரம்பு போன்ற ஏழுவகை தாதுக்களால் ஆனது.

## ராஜகோபுரம் :

பெரிய கோவில் ஒன்று அமைத்து அதற்கு வாயில் ஒன்று வைக்கப்படுகிறது. அந்த வாயிலுக்கு மேல் உயர்ந்த கோபுரம் ஒன்று எடுக்கப்படுகிறது. கோவிலில் உள்ள ஏனைய கோபுரங்களைவிட இந்த கோபுரம் மிக உயர்ந்து காணப்படும். நெடுந்தொலைவிலிருந்து பார்த்தால் கூட கம்பீரமாக காட்சியளிக்கும் இதற்கு ராஜகோபுரம் என்று பெயர். இது ஸ்தூல லிங்கமாகும். வெகு தொலைவிலிருந்து கண்ணுக்கு தென்படும்போது இதை தெய்வ சொரூபமாகவே எண்ணி

வணங்குவார்கள். "கோபுர தரிசனம் பாப விமோசனம்" என்ற பழமொழி, இந்த வழக்கிலிருந்துதான் வந்தது.

இதன் அமைப்பை நாம் இப்போது பார்க்கப் போகிறோம். ஆம்! அதில் எத்தனை வகையான சிற்பங்கள், தேவ வடிவங்கள், தேவ கணங்கள், தெய்வ வடிவங்கள், பட்சி ஜாதிகள், மிருக ஜாதிகள், புராண, இதிகாச வரலாறு, மானிட வடிவங்கள், மெய்யடியார்கள் மற்றும் ஏனைய வடிவங்கள். ஆம்! பிரபஞ்ச அமைப்பில் இவையாவுக்கும் இடமுண்டு என்பது கோட்பாடு. சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்கு இனம், மக்கள் இனம், தேவர் கூட்டம் ஆகிய எல்லோரும் பிரபஞ்சத்தில் உள்ளார்கள். அண்டத்தில் இன்னது உள்ளது, இன்னது இல்லை என்று எவராலும் பாகுபடுத்த முடியாது என்னும் கோட்பாட்டை இவ் ராஜகோபுரம் விளக்குகிறது.

ராஜகோபுரத்தின் மேல்நிலை பொதுவாக ஒற்றைப் படை எண்ணில் அமைந்திருக்கும். மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது பதினொன்று, இவ்வாறு அதில் அமைந்துள்ள நிலைகள் ஒன்றன் மேல் ஒன்றாகப் பெருகிக் கொண்டே போகும்.

| | |
|---|---|
| *மூன்று நிலைகள் :* | ஜாக்கிரத், ஸ்வப்பன, சுஷுப்தி என மூன்று அவஸ்தைகளைக் குறிக்கும். |
| *ஐந்து நிலைகள் :* | ஐம்பொறிகளைக் குறிக்கும். |
| *ஏழு நிலைகள் :* | ஐம்பொறிகளோடு மனம், புத்தி, என இரண்டும் சேரும். |
| *ஒன்பது நிலைகள் :* | அந்த ஏழினோடு சித்தம் அகங்காரம் என இரண்டும் சேர்ந்து ஒன்பதாகும். |

பஞ்சேந்திரியங்களைக் கொண்டும், மனம், புத்தி முதலியவைகளைக் கொண்டும் புறவுலகை அறிகிறோம். புறவுலகை அறிகிற செயலை அப்படியே நிறுத்திவிட்டு மனதை துணையாகக் கொண்டு பரம் பொருளிடத்து பயணம் போக வேண்டும் என்னும் கோட்பாட்டை ராஜகோபுர வாயினுள் பண்ணும் பிரவேசம், நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

## பலிபீடம் :

ராஜகோபுரத்தை தாண்டி உள்ளே நுழைந்ததும் நம் கண்ணுக்கு எதிரில் புலப்படுவது பலிபீடம். அதன் அருகில் சென்று வீழ்ந்து வணங்கி வழிபடும் போது சாதகன் மனதில் எழும் எண்ணமே மிக முக்கியமானது. அவனது கீழான எண்ணங்கள், இச்சைகள் அனைத்துமே அவன் அவ்வாறு வணங்கும் போது பலிபீடத்தில் பலி கொடுக்கப்படுகிறது. இவ்வாறு பலியிட்ட பின் தூய சிந்தனை, மேலான எண்ணத்துடன் அவன் எழ வேண்டும். அங்கு மனிதத் தன்மை வாய்ந்த மனிதன் எழுந்திருக்கிறான் என்ற எண்ணம் வலிமை பெறுகிறது. அந்த எண்ணத்தின் சக்தி, அவன் புதியதொரு பிறவி எடுத்ததற்குச் சமானமாகிறது.

## த்வஜஸ்தம்பம் அல்லது கொடிமரம் :

பலிபீடத்தை அடுத்து உள்ளது கொடிமரம். இதை வட மொழியில் த்வஜஸ்தம்பம் என அழைப்பார்கள். இது கோபுரம் அல்லது விமானத்தைப் போன்று நெடிது உயர்ந்தும், நந்திக்கு எதிரிலோ அல்லது பின்னரோ சில கோயில்களில் காணப்படும். த்வஜஸ்தம்பம்,பலிபீடம், நந்தி ஆகிய மூன்றும் ஒரே நேர் கோட்டில் மூலவரை நோக்கி இருக்கும்.

கொடிமரம் எனப்படும் த்வஜஸ்தம்பம் எவ்வாறு நேராக இருக்கிறதோ, அதேபோல் உடல் நேராக இருக்க வேண்டும். இதன் உயரம் விமானத்திற்கு சமமாகவோ அல்லது அதன் முதல் மாடி போன்ற பகுதிகளுக்குச் சமமாகவோ இருக்க வேண்டும். இதன் அதி தேவதை சிவன். ஆகவே இது சிவனைக் குறிக்கும். இதனை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்.

1. சதுரமான அடிப்பகுதி
2. எண்கோண வேதி போன்ற அமைப்பு
3. உருளை போன்ற தடித்த உயரமான மரம்.

சதுரமான அடிப்பகுதி பிரம்மாவையும், எண்கோணவேதி போன்ற பகுதி விஷ்ணுவையும், உருளை போன்ற தடித்த உயரமான மரம் ருத்ரனையும் குறிக்கும் என ஆகமங்கள் கூறுகின்றன.

இதன் ஏனைய பாகங்கள் : மூன்று குறுக்கு கட்டைகள். இது இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தியைக் குறிக்கும். இரண்டு குறுக்குத் தண்டுகள் சூரியன் சந்திரனைக் குறிக்கும். கொடியேற்றும் கயிறு – அனுக்கிரக சக்தி. கொடி – வாயு. கொடியில் வரையப்பட்ட நந்தி – நந்தியைக் குறிக்கும்.

த்வஸ்தம்பம் சைவ ஆகமங்களில் குறிப்பிடும் போது மூன்று பொருள்களான பசு, பதி, பாசம் என்பனவற்றையும் மேலும் பசு எவ்வாறு பாசத்தை ஒழித்து இறையருளுடன் சிவனுக்குச் சமமான நிலையை அடைய முடியும் என்பதையும் உணர்த்துகிறது.

கொடி மரத்தைத் தாண்டி மண்டபத்தில் நுழைந்த உடன் எந்த ஒரு சன்னிதியிலே அல்லது இடத்திலோ விழுந்து வணங்குதல் கூடாது.

கொடி மரத்தின் முன் வணங்கும் ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். (தலை, இரண்டு கைகள், இரு காதுகள், இரு முழங்கால்கள், மார்பு இவைகள் பூமியில் படும்படி வணங்குதல் வேண்டும்). பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்யவேண்டும். (இரண்டு கைகள், இரண்டு முழங்கால், தலை இவைகள் பூமியில் படும்படி வணங்குதல் வேண்டும்)

கொடிமரத்தின் முன் வணங்குபவர்கள் குறைந்தது மூன்று முறையாவது வணங்குதல் வேண்டும். மூன்று முறைக்கு குறைந்து

வணங்குதல் கூடாது. கிழக்கு நோக்கிய சந்நிதியாயின் கிழக்கில் தலை வைத்தும் வணங்க வேண்டும். (அவ்வாறு நமஸ்காரம் செய்யும் போது கிழக்காகவோ அல்லது வடக்காகவோ சந்நிதிகள் இருந்தால்நமஸ்காரம் செய்தல் கூடாது. தலை மீது இரு கரம் குவித்து வணங்குதல் வேண்டும்.)

தரையில் விழும்போது நமது உடலில் மண் போன்றவைகள் ஒட்டிக் கொள்ளக்கூடும். அவ்வாறு எவ்வளவு மண்கள் நமது உடலில் ஒட்டிக் கொள்கிறதோ, அவ்வளவு காலம் நாம் சிவனின் திருவடிகளில் வாழ்வோம் என வேதம் கூறுகிறது.

கோவில் விழாக் காலங்களில் விழாவினைக் குறிக்கும் ஏற்றுக் கொடியை உயர்த்துவதற்காகவும் கொடிமரம் பயன்படுகிறது.

## யாகசாலை :

இது 36 தத்துவ ஸ்வரூபமாகவும், சிவபெருமானது அட்ட மூர்த்த வடிவாகவும் கூறப்படும். யாகசாலையில் ஒன்பது குண்டங்களில் அக்னி வளர்க்கப்படும். அவை நாற்கோணம், முக்கோணம், அர்த்தசந்திரம் முதலிய வடிவங்களில் காணப்படும். குண்டங்களைச் சுற்றிப் பசுந்தர்ப்பைகளைப் பரப்பி ஆல் அரசு முதலிய சமித்துகளை குண்டத்தில் கடைந்தெடுக்கப்பட்ட சுத்தமான அக்னி கொண்டு அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி அதி தெய்வங்களை மனதில் தியானித்து, சிருக்கு, சிருவம், என்னும் கருவிகளைக் கொண்டு நெய் சொரிந்து அவிஸ் வளர்க்கப்படும். மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றாலும் வழிபாடு நிகழும். ஓமக் குண்டத்திலிருந்து எழுகின்ற புகையும், வேதம், சிவாகமம், திருமுறை ஒலிகளும், அன்பர்களின் நல்லெண்ணங்களும் எங்கும் வியாபிக்கின்ற இறைவனது அருட்சக்தியை தூண்டி, உலகெங்கும் பரவச் செய்து நன்மைகளை உண்டு பண்ணும்.

## நந்தி :

ஒரு ஆலயத்தில் சிவலிங்கம், நந்தி, கொடிமரம் பலிபீடம் ஆகியவை ஒரே வரிசையில் இருக்கக் காணலாம். நந்தி கர்ப்பக்கிரகத்தில் உள்ள சிவனைப் பார்த்தவாறு அமர்ந்திருக்கிறது. இது சிவனின் வாகனம். வாகனம் எதுவாயினும் அது ஜீவான்மாவைக் குறிக்கிறது. மூலப் பொருளான இறைவனைப் பார்த்த வண்ணமாக உள்ளது. ஜீவான்மாவின் குறிக்கோள் இறைவனைச் சென்றடைய வேண்டும் என்பதுதான். அந்த கோட்பாட்டை விளக்கும் பொருளாக நந்தியம் பெருமான் சிவனை நோக்கி இருக்கிறார். ஆகவே, பக்தர்கள் வலம் வரும்போது நந்திக்கு குறுக்கே செல்லாமல் அதைச் சுற்றிதான் வலம் வரவேண்டும். இந் நந்தியின் உத்தரவு பெற்றே கர்ப்பக்கிரகத்தில் எழுந்தருளியிருக்கும் சிவனை நாம் தரிசனம் செய்ய வேண்டும்.

## பிரகாரம் :

ஆலயத்தில் ராஜகோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றால் பிரகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு ஆலயத்திலும் உள்ள பிரகாரங்கள் அவ்வாலய வரலாற்றை ஒட்டிப் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன. இத்தகைய பிரகாரங்களின் மதில் சுவர்கள் இறைவனை மறைத்துக் கொண்டிருக்கின்றன. எந்த திசைகளிலிருந்தும் இறைவனைக் காண முடிவதில்லை. பிரதான வாயில் எனப்படும் ராஜகோபுரம் வழியாகத்தான் உள்ளே சென்று நாம் இறைவனை வழிபட முடிகிறது. மதில் சுவர்கள் இல்லையென்றால் இறைவனை எங்கிருந்தும் எப்போதும் வழிபடலாம்.

பொதுவாக ஆலயங்களில் ஐந்து பிரகாரங்கள் உள்ள கோயில், மூன்று பிரகாரங்கள் உள்ள கோயில், ஒரு பிரகாரம் உள்ள கோயில் எனப் பிரிக்கலாம். ஐந்து பிரகாரங்கள் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்துவித கோசங்களையும் குறிக்கும். மூன்று பிரகாரங்கள் தூல, சூட்சும, காரணம் என்னும் மூவகை உடம்புகளைக் குறிக்கின்றன.

அவ்வாறு கோயிலில் வழிபடுவோர் மூன்று முறை, ஐந்து முறை பிரகாரங்களைச் சுற்ற வேண்டும் என்பது மூவகை உடம்பையும், ஐந்துவித கோசங்களையும் கடந்து இறைவன் விளங்குகிறான் என்பதை நினைவூட்டும்.

## பிரதட்சனம் செய்தல் :

ஆலயத்தில் உள்ள பிரகாரங்களில் பிரதட்சணம் செய்வதால் உண்டாகும் பலன்.

| | | |
|---|---|---|
| காலையில் வலம் வருதல் | – | நோய் நீங்கும் |
| பகலில் வலம் வருதல் | – | விருப்பம் அளிக்கும் |
| மாலையில் வலம் வருதல் | – | எல்ல பாவத்தையும் அகற்றும். |
| அர்த்தசாமத்தில் வலம் வருதல் | – | மோட்ச சித்தி உண்டாகும். |
| விநாயகருக்கு | – | ஒருமுறை வலம். |
| சூரியனுக்கு | – | இரண்டுமுறை வலம். |
| சிவனுக்கு | – | மூன்றுமுறை வலம். |
| அம்மனுக்கு | – | நான்குமுறை வலம் |

ஆலயத்தில் உள்ள இதர பரிவார தேவதைகளுக்கு தனித்தனியாக வலம் வருதல் கூடாது. சேர்த்தே பிரதட்சணம் செய்ய வேண்டும்.

## மூலவர் :

மூலவர் என்பவர் கர்ப்பக்கிரகத்தில் உள்ள சிவலிங்கம் ஆகும். இவரைத் தரிசிக்க, கருவறை வாயிலில் எழுந்தருளியிருக்கும் துவார பாலகர்களிடம் அனுமதி பெற்றே செல்ல வேண்டும்.

லிங்கம் என்பதற்கு குறி என்று பொருள். குறி என்றால் அடையாளம். லிங்கம் என்ற சொல்லை லிம் + கம் எனப் பிரித்து 'லிம்' என்பதற்கு அண்ட சராசரங்கள் அனைத்தும் ஒடுங்குமிடம் என்றும், 'கம்' என்பதற்கு அவ்வாறு ஒடுங்கிய அப்பொருள்உள்ளவன் மீளத்தோன்றுவதற்குரிய இடம் எனவும் பொருள் கூறுவர். காணமுடியாத இறைவனைக் காணுவதற்குரிய அடையாளமே சிவலிங்கமாகும்.

சிவலிங்கத்தின் அடிப்பாகம் பிரமபாகம் என்றும், ஆவுடையார் விஷ்ணுபாகம் எனவும், பானம் ருத்ரபாகம் என்றும் அழைக்கப்படும். சிவலிங்கங்கள் பலவகைப்படும். அவைகள் முறையே – தானே தோன்றியதைச் சுயம்புலிங்கம் எனவும், விநாயகர், ராமர், முருகன் போன்ற கணங்களால் ஸ்தாபிக்கப்படுவதைக் கணலிங்கம் என்றும், இருடிகளால் ஸ்தாபிக்கப்பட்டதை தைவிக லிங்கம் எனவும், மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டதை மானுடலிங்கம் எனவும் கூறுவர்.

சிவலிங்கத்தை வழிபட்டால் யாவற்றையும் வழிபட்டதாகும். நினைத்தாலும் எல்லாவற்றையும் நினைத்ததாகும். போய் தரிசித்தால் எல்லாவற்றையும் தரிசித்தாகும். இவ்வாறு வேதங்களும், உபநிடதங்களும் கூறுகின்றன. இச்சிவலிங்க வழிபாட்டினை 28 ஆகமங்கள் விரிவாக விவரிக்கின்றன. இந்தக் கலியுகத்தில் சிவனுடைய சக்தியை அறியும் பொருட்டு பாரெங்கும் பல லட்சக்கணக்கான சிவ ஸ்தலங்கள் உண்டாகி இருக்கின்றன. பிரதியொரு ஸ்தலத்தில் பல லிங்கங்கள் உள்ளன. சிவலிங்கம் இல்லாத பூமியே இல்லை. கலியுகத்தில் மக்கள் நன்னெறியுடன் வாழ நாயன்மார்கள் அவதரித்து பல தலங்களுக்குச் சென்று தரிசித்து பின் முக்தியடைந்து, நமக்கும் முக்தியடையும் மார்க்கத்தையும் காட்டியிருக்கிறார்கள். இந்தக் கலியுகத்திற்கு சிவஞானமே சிறந்த ஞானம்.

## மகாமண்டபம் :

நந்தியின் அருகில் நின்று மூலவரைக் கண்டு வணங்கிய சாதகன், அடுத்துள்ள மகா மண்டபத்திற்குச் செல்கிறான். ஆசாரியர், பட்டர், குருக்கள் எனக் கூறப்படும் ஆன்மலிங்கம் உள்ள இடம் மகா மண்டபம், ஆலய வழிபாடு புரிவோர், தம்முடன் தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், பூ ஆகியவற்றை எடுத்துச் செல்லவேண்டும் என்பது ஆகமவிதி. இவற்றை எடுத்துச் செல்லும் சாதகன் மகா மண்டபத்தில் வீற்றிருக்கும் ஆன்ம லிங்கமாகிய குருக்களிடம் அளிக்க வேண்டும். குருக்கள் அவற்றைக் கொண்டு, செய்யும் ஆராதனையும் ஓர் தத்துவத்தை விளக்கும்.

**தேங்காய்** : இது வழிபடச் செல்லும் ஆன்மாவை குறிக்கும். இதில் உள்ள மூன்று கண்கள் மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயையைக் குறிக்கும்.

**ஓடு** : ஆன்மாவைப் பதித்து நிற்கும் பாகங்களின் கடினத் தன்மையைக் குறிக்கும்.

**தேங்காய் பருப்பு** : ஆன்மாவைக் குறிக்கும்.

**தேங்காய் உடைக்கும் கருவி**: ஆன்ம விடுதலைக்குத் தேவையான இறைவனது திருவருளைக் குறிக்கும்.

**பழங்கள்** : சாதகனின் நல்வினைப் பலன்களைக் குறிக்கும்.

**கற்பூரம்** : இறைவனோடு இரண்டறக் கலக்கும் பக்குவம் வாய்ந்த ஆன்ம நிலையை உணர்த்தும்.

இதுவரை கூறியவற்றை நன்கு அறிந்தவர்கள் ஆலயத்திற்குச் செல்லும்போது :

1. கோபுரத்தைப் பார்த்தவுடன் "நான் உடம்பு அல்ல, ஆன்மா" என உணர்ந்து கொள்ள வேண்டும். கோபுர தரிசனம் முடிந்து பலிபீடம் சென்றதும் "நான் இச்சை அல்ல" என நினைவிற் கொண்டு கீழே விழுந்து வணங்கும் போது தன்னிடம் உள்ள சுயநல இச்சைகளாகிய மிருகங்களை அங்கே பலி கொடுத்ததாகப் பாவிக்க வேண்டும். பின் எழுந்து நின்று த்வஜஸ்தம்பத்தை நோக்கி "நான் மனமுமல்ல, தத்துவங்களல்ல" என்று நினைப்பூட்டிக் கொண்டு உள்ளே செல்ல வேண்டும்.

2. உள்ளே சென்று கர்ப்பக்கிரகத்தை வணங்கும் போது தன்னை ஜீவான்மாக உணர்ந்து அதன் தன்மைகளாகிய "யான், எனது" என்னும் உணர்ச்சியை நீக்கி, இறைவனோடு இரண்டறக் கலந்து, அவனுடைய அருட் கருவியாக மாத்திரம் இருக்க விரும்ப வேண்டும்.

3. பின்னர் வலம் வந்து அங்குள்ள ஏனைய மூர்த்திகளைத் தொழும்போது தன் இயற்கை நிலை இன்னதெனத் தெளிய வேண்டும். அங்ஙனம் தெளிந்து அதற்குரிய ஆத்ம சாதனத்தையும் ஊக்கத்துடன் கையாள முயல வேண்டும். அச்சாதனமே முக்தி நெறியில் அவனுக்கேற்பட்ட குறுக்குப் பாதையும் நேர் பாதையுமாகும்.

இங்ஙனம் உட்பொருளை அறியாதும் அதனை அனுபவத்திற் கொண்டு வர முயலாதும் ஆலயம் செல்வதும், தொழுவதும் அனேகமாக வீண் வேலையாகவே அல்லது வியர்த்தமாகவே முடிகிறது. அடிக்கடி ஆலயஞ் செல்வோரிடத்துங் கூட தெய்வத் தன்மை விளங்கிக் காணாமைக்கு இதுவே ஒரு காரணம். ஆலய வழிபாட்டின் ஒரே நோக்கம் மிருகத் தன்மையை ஒழித்து, மனிதத் தம்மையை அடக்கி, தெய்வத் தன்மையை ஒளி வீசச் செய்தலாம்.

**(நன்றி: "மங்கை" ஆலய மலர் - மே 1995)**

# சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம்

*(சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜய நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு மாமன்றம் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதலாம் பிரிவில் முதலாவது பரிசைப் பெறும் கட்டுரை)*

சி. தயாநிதி
வெஸ்லி உயர்தரப் பாடசாலை, கல்முனை.

இந்து சமயத்தின் மேன்மையை உலகறியச் செய்யும் நோக்குடன் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் இந்து சமயப் பேருரையொன்றினை நிகழ்த்தி இந்து மதத்தினையும், இந்துக்களையும் தலை நிமிரச் செய்த சுவாமி விவேகானந்த அடிகளார் அவர்கள் அங்கிருந்து இங்கிலாந்து, ஐரோப்பாவின் சில நாடுகளுக்கும் விஜயம் செய்து ஆன்மீக உணர்வினை அம் மக்களிடையே ஏற்படுத்தி இந்து சமயத்தின் பெருமைக்கு வித்திட்டார். இத்தகைய கால கட்டத்தில் தான் இலங்கையில் இந்துக்களின் விருப்பத்துக்கு ஏற்ப இலங்கை விஜயத்தை மேற்கொண்டு இலங்கை மக்களிடையே இந்து மத விழிப்புணர்வை ஏற்படுத்த வித்திட்டார் என்றால் அப்பெருமைகள் அனைத்தும் சுவாமி விவேகானந்த அடிகளார் அவர்களையே சாரும்.



முதன் முதலில் இலங்கைத் திருநாட்டிற்கு சுவாமிஜி அவர்கள் 1897ம் ஆண்டு தை மாதம் 15ம் திகதி அன்று வருகை தந்தார்கள். இலங்கையின் கொழும்புத் துறைமுகம் அன்று பெரும் விழாக் கோலம் பூண்டிருந்தது. வாழை மரங்களும், கமுகு மரங்களும் நிறைந்திருக்க வீதிகள் தோறும், வீடுகள் தோறும் பூரண நிறை கும்பங்கள் காட்சியளிக்க இந்து மதத்தின் பெருமைகளை உலகறியச் செய்ய வருகை தந்த சுவாமி விவேகானந்த அடிகளாருக்கு கோலாகலமான வரவேற்பு அன்று வழங்கப்பட்டது. இந்து மக்கள் கடலலைகள் போல் திரண்டிருக்க பாண்ஸ் வீதியினூடாக முதலாவது ஊர்வலம் நடாத்தப்பட்டது. இவ் வரவேற்புக்குழு முடிவில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் *"மேனாட்டில் மெய்ஞ்ஞானம் பரப்பும் நோக்குடன் மகத்தான பணி செய்த தேவரீருக்காக இவ் வரவேற்புரை வழங்கப்படுகின்றது"* என்று வரவேற்புக் குழு ஏற்பாட்டாளரால் கூறப்பட்டது. இவ் வரவேற்பை மன நெகிழ்வுடன் ஏற்றுக் கொண்ட சுவாமிஜி அவர்கள் *"பிச்சைக் காரனான துறவி ஒருவருக்கு இப்படிப் பட்ட ராஜோபசாரம் செய்வதிலிருந்தே இந்துக்கள் ஆன்மீகத்துக்கு அளிக்கும் மதிப்புத் தெரிகின்றது"* என்று தன் மனம் உருகி உருக்கமாகக் கூறினார். அடுத்த நாட்காலை அதாவது 16ம் திகதி கொழும்பு நகர மண்டபத்திலே 'இந்திய புண்ணிய பூமி' என்ற தலைப்பில் அங்கு குழுமி இருந்த ஆயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் ஒரு தெய்வீக சொற்பொழிவொன்றை ஆற்றினார். இச் சொற்பொழிவு முழுக்க முழுக்க இந்தியாவின் தெய்வீகத் தன்மை பற்றியதாகவே காணப்படுகின்றது.

1897ம் ஆண்டு தை மாதம் 17ம் திகதி சுவாமிஜி அவர்கள் கொழும்பு கொச்சிக்கடையில் அமைந்துள்ள பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலுக்கு வழிபாட்டிற்காகச் சென்றிருந்தார். அங்கு சுவாமிஜியைக் காணப் பெருந்திரளான மக்கள் கூடி இருந்தனர். அது கண்ட சுவாமிஜி அவர்கள் இலங்கை இந்துக்களின் தெய்வ பக்தியை நினைத்து பெருமிதம் அடைந்து அவர்களுடன் நீண்ட நேரம் உரையாடினார். அங்கிருந்து மக்களால் அழைத்துச் செல்லப்பட்ட சுவாமிஜி அவர்கள் கொழும்பு நகரில் உள்ள பொது மண்டபம் ஒன்றில் சமயப் பேருரை நிகழ்த்தி இலங்கை இந்துக்களின் உள்ளங்களில் சமயப்பற்றை மேலோங்கும் வ ாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார். தொடர்ந்து, 'வேதாந்த தத்துவம்' எனும் தலைப்பில் சொற்பொழிவொன்றையும் நிகழ்த்தினார். அதிலே அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"வேறு துறைகளில் சென்றாலும் எல்லோரும் ஒரு இடத்திற்குத்தான் செல்கின்றார்கள் ; சிலர் வளைந்து சொல்லாம், சிலர் நேராகச் செல்லலாம். ஆனால் யாவரும் ஒரு கடவுளின் அடியில் தான் கூடுகின்றார்கள்."*

என்ற ஆன்மீக கருத்துக்களின் மூலம் மக்களின் மத்தியில் இந்து சமய கருத்துக்களை விதைத்தார். இதனைத் தொடர்ந்து சுவாமிஜிக்கு இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் இருந்து அழைப்புக்கள் வரலாயின. இவ்வழைப்பை ஏற்றுக் கொண்ட சுவாமிஜி அவர்கள், கொழும்பில் இருந்து 1897ம் ஆண்டு தை மாதம் 19ம் திகதி கண்டிக்கு விஜயம் செய்தார். அங்கு கண்டித் தமிழ் மக்களால் சுவாமிஜிக்கு வரலாறு காணாத வரவேற்பு நடாத்தப்பட்டது. அங்கு அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் சுவாமிஜி சொற்பொழிவொன்றினை நிகழ்த்தினார். தொடர்ந்து மாத்தறை சென்ற சுவாமிஜிக்கு வழங்கப்பட்ட வரவேற்பில் மனம் நெகிழ்ந்து, இந்துக்கள் பழகுவதிலும் இனிமையானவர்கள் என்ற உண்மையினை உணர்ந்து *"இந்து மதத்தின் பெருமை"* எனும் பொருள்பட ஓர் சொற்பொழிவை நிகழ்த்தினார். இங்கிருந்து இந்துக்கள் புடை சூழ 20ம் திகதி அநுராதபுரம் வந்தடைந்தார். அங்கு புத்தரின் புனித சின்னங்களுள் ஒன்றான போதி மரத்தை அடைந்த சுவாமிஜி அதனை வணங்கி *"வழிபாடு"* எனும் தலைப்பில் சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார். அங்கு இவரது சொற்பொழிவை குறுக்கீடு செய்த பௌத்தர்களின் அறியாமையை நினைத்து வருந்திய சுவாமிஜி 'சமய வாழ்வில் சகிப்புத்தன்மை' எனும் தலைப்பில் சொற்பொழிவொன்றை நிகழ்த்தி அவர்களின் தலைக்கனத்தை அகற்றினார்.

இதனைத் தொடர்ந்து யாழ். இந்துக் கல்லூரிக்கு அடிகளார் சென்று வேதாந்தம் பற்றிய தெளிவுரைகளை எடுந்தியம்பினார். அத்தோடு 'எந்த தெய்வத்தை நீங்கள் வணங்கினாலும் கீழ்ப்படிவுடன் நன்னெறியில் வாழ்தலே முக்கியமானதாகும்' எனவும் சுவாமிஜி அவர்கள் எடுத்துக் கூறினார். இவ்வாறாக இலங்கையில் பதினொரு நாட்கள் தங்கியிருந்த சுவாமிஜி அவர்கள் இந்துமத தத்துவங்கள் பற்றி விளக்கி தமது தாயகமான இந்தியா பயணமானார்.

*''பரலோக சிந்தனைகள் மட்டும் சமயமாவதில்லை – இகவாழ்வு பரவாழ்வு இரண்டின் மேம்பாட்டிற்கு உதவுவதே இந்து சமயம்''* என்று பரமஹம்ஸரின் உறுதி மொழியை எடுத்தியம்பியது, இன்றும் நீங்காவண்ணம் உள்ளது. இத்தயை சிறப்புக்களால் இந்து மதத்தின் பெருமையை உலகறியச் செய்த சுவாமி விவேகானந்தரின் நாமத்தை நாம் என்றும் மறவாதிருப்போமாக.

---

ஒவ்வொருவரும் தம்மாலான வகையில் பிறருக்கு உதவ ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஏழைகளாக இருப்பவர்கள் சரீர உபகாரம் செய்யலாம். பணக்காரர்கள் பொருளுதவி செய்யலாம். செல்வாக்கு உள்ளவர்கள் மற்றவர்களின் நிலை மேம்படத் தமது செல்வாக்கை உபயோகிக்கலாம். இவ்வாறாக ஒவ்வொருவருக்கும் சமூக சேவை செய்ய வாய்ப்பு இருக்கிறது.

**(காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள்)**

---

# இறையன்பு

சீவன்மீது காணாமலே காதல்கொண்டு, அவன் திருத்தாளின் தலைப்பட்ட தலைவியின் செயலை, திருநாவுக்கரசுநாயனார் அழகுடன் சித்தரிக்கும் திருமுறைப் பாடல்



*முன்னம் அவனுடைய நாமங்கேட்டாள்*
*மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்*
*பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்*
*பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்*
*அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்*
*அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை*
*தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்*
*தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே*



# மாரித்தாயே வந்தருள்வாய்



மாத்தளையிற் கோயில் கொண்ட மாரியம்மா
எங்கள் மனக் குறையைத் தீர்த்திடவே வாராயம்மா
அழகு ரதம் ஏறியுலா வரும் சக்தியம்மா
அச்சமற்று வாழ வழி காட்டிடம்மா

நிம்மதியை நாடி நாளும் இறைஞ்சுகின்றோம்
நின்கருணைப் பேரருளே யதைத் தந்திடட்டும்
பாரினிலே உன்கருணை பெருகி விட்டால்
ஏதெமக்கு தொல்லை தரும் பகைமையெல்லாம்

வாடிநிற்கும் எங்களையும் பார்த்திடம்மா
வந்து அருள் வழங்கிட நீ தயங்குவதேன்
நாடுகின்றோம் உன்னடியை நாமெல்லோரும்
நல்லவளே இரங்கி யெமக்கருள் தருவாய்

பிறந்து விட்டோம், வாழ்ந்திட நாம் அச்சமின்றி
பெருமகளே துணையிருந்து வழிகாட்டிடம்மா
இறந்துபட்டுப் போவதுதான் உண்மையாகும்
இருக்கும் வரை இவ்வுலகில் நீயே காவல்

ஆடுகின்ற அண்ணல் அவன் எங்கள் தெய்வம்
அவனுக்கும் சக்தியூட்டி ஆட்டும் தாயோ
போதுமம்மா நாமடைந்த துன்பமெல்லாம்
பொறுமையினைக் களைந்தெறிந்து வாராய் தாயே.

த. மனோகரன்
"உமாபதி"
கொழும்புத்துறை

# யார் பெரியவர் ?

- குமாரசாமி சோமசுந்தரம் -

யார் பெரியவர்? என்று கேட்டால், பெரியவர்க்குரிய இலட்சணங்களைக் கூறி, அத்தகைய இலட்சணங்களைக் கொண்டவர்களைப் பெரியவர்கள் எனக் கூறலாம் என்பர். நல்லவற்றையே நினைத்து, நல்லவற்றையே செய்பவர்களைப் பெரியவர்கள் எனலாம். பகைவர்க்கும் கருணை செய்பவர் பெரியவர். ஒன்றை முன்கூட்டியே சொல்லாமல், தேவையுணர்ந்து உதவி புரிபவர் பெரியர். இதனையே " சொல்லாமலே பெரியர்" என்னும் தொடர் உணர்த்துகிறது.

பெரியவர்கள் மனிதருள் மாணிக்கங்கள்; ஒளி வீசுபவர்கள்; மற்றையோர் வாழ்வில் ஒளி ஏற்றுபவர்கள். மற்றவர்கள் சந்தோஷமாக வாழ்வதைக் கண்டு பேருவகை கொள்ளத்தக்கவரே பெரியவர். மனிதர்களில் மாணிக்கங்களும் உண்டு என்னும் போது, மனிதர்களில் கற்களும் பதர்களும் கூட உண்டு என்பதும் அதில் தொனிக்கிறது. அவர்கள் உயிரோடு இருந்தும் இல்லாதவர்களேயாவர்.

கல்வியறிவு ஒருவர்க்குப் பெருமை தரும். எப்போது என்றால், கற்றாங்கு ஒழுகும் போது ஆகும். கல்வி, செருக்கையும் உண்டு பண்ணும். கல்வியோடு அகந்தையும் சேர்ந்து கொண்டால் ஆபத்துத்தான். எவ்வளவோ கற்றிருந்த போதிலும் "கற்றது கைம் மண்ணளவு கல்லாதது உலகளவு" என்று எவனொருவன் தன்னைப் பணிவுடையன், இன்சொலன் ஆக ஆக்கி கொள்கிறானோ அவனே பெரியன்; சிறந்த கல்விமான்.

நிறை குடம் தழம்பாது. சிறந்த கல்வியைப் பெற்றவர்கள் சலசலப்பு செய்யமாட்டார்கள். ஆன்றவிந்து அடங்கிய சான்றோராக விளங்குவர். வெறுங் குடத்தினுள் ஒரு சிறு கல் போட்டாலும் பெருத்த சத்தம் கேட்கும். வீண் வாதங்களிலும், வெற்றுரைகளிலும் காலத்தைக் கழிப்பவர்களை அறிவாளிகள் என்று கூறமுடியாது. தங்கப் பவுண் பெறுமதி கூடியது. கீழே போட்டால் அதிகம் சத்தம் எழுப்பாது. தகரம் பெறுமதி குறைந்த உலோகம்; கொஞ்சம் கீழே போட்டால் போதும் பெருஞ் சத்தம் எழுப்பும். மதிப்பும் பெருமையும் மிக்கவர்கள் என்றும் அமைதியாகவே இருப்பர். ஆணவத்திற்கு அடிமையானால் கற்ற கல்வியினால் யாது பயனும் இல்லாமல் போய்விடும்.

அகந்தைக்கு அடுத்தாற் போலக் கோபம் பொல்லாதது. கற்றவர்கள் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்கள், தாம் கோபக்காரர்கள் என்று தம்மை விளம்பரம் செய்வதிலும் பெருமை கொள்கிறார்கள். கற்றவர் என்றால் செருக்கு இருக்கத்தான் செய்யும்; கோபம் வரத்தான் செய்யும் என்று சர்வசாதாரணமாகக் கூறிக் கொள்கின்றனர். அதனை ஞானச் செருக்கு என்று முத்திரை வேறு குத்திக் கொள்கின்றனர். இவையெல்லாம் அவர்களின் அறியாமையையும் சிறுமையையுமே புலப்படுத்துகின்றன. கோபத்தை விடக் கொடுமையான தொன்று இருக்க முடியாது. கோபத்தால் நிலையில் தாழ்ந்தோர் அழிந்தோர் பலர். கோபத்தை ஆராதித்தவர்கள்; செருக்கை வாலயம் பண்ணினவர்கள். எத்துணை கல்வி, பொருள், பதவி, அந்தஸ்து பெற்றிருந்தும், செழிப்பாக வாழ்ந்ததாகவோ, முடிவு இன்பமாக மலர்ந்ததாகவோ வரலாறு கிடையாது. சினத்தை அடக்க வல்லவன்; செருக்கை அறுக்க வல்லவன்; ஆசையை ஒடுக்க வல்லவன் எவனோ அவனே பெரியவன்.

மனித சமுதாயத்தில் வேற்றுமைகள், பேதங்கள் உயர்வு தாழ்வுகளுக்கு இடமில்லை. உண்மைதான். பிறப்பினால் பேதம் இல்லை. ஆனால் மனிதர்கள் கொண்டுள்ள பண்புகளால், குணங்களால், செயல்களால் அவர்களிடையே பேதம் இல்லை என்று சொல்ல முடியாது. மனிதர்களில் பெரியவர்களும் உண்டு; சிறியவர்களும் உண்டு; கற்களில் மாணிக்கங்களும் உள்ளன; கூழாங்கற்களும் உள்ளன என்பதைப் போல சிறந்த அறிவு, ஒழுக்கம், குணப்பண்புகள் உடையார், பெரியவர்கள்; அதே வேளை அறிவில்லாத மூடர்களையும் பாதகங்கள் புரிபவர்களையும், பிறருக்கு வேண்டுமென்றே தொல்லைகள், இடையூறுகள் செய்பவர்களையும் எவ்வாறு பெரியவர்களுடன் சமமாக வைத்துச் சமத்துவம் பேசலாம். உயர்ந்தோர் யாவரும் மேலோர் ஆவர். அவர்கள் நற்குண, நற்செய்கைகளில் ஈடுபடுவோர். கெட்டவர்கள் யாவரும் இழிந்தோர் ஆவர். இழிந்தோரும் தம் ஈனச் செயல்களைக்

கைவிட்டு, நற்செயல்களிலும் நல்லொழுக்கத்திலும் ஈடுபாடு கொள்வார்கள் ஆகில் உயர்ந்தவர்கள் ஆக வளர்ச்சி பெற முடியும்.

ஒருவன் நம்மைத் தாக்க வந்தால், எமது கைகள் விரைந்து தடுக்க முற்படுகின்றன. உடம்பில் விழ வேண்டிய அடியை, கைகள் முன்னோடிச் சென்று வாங்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. கைகள் நமக்குப் பாதுகாப்பாக உள்ளன. கைகளின் பெருந்தன்மை அது. பெரியவர்களும் அப்படித்தான். பிறர்க்கு ஏதாவது கேடுவருவதை அறிந்து கொண்டால் உடனே தாம் முன் சென்று அக் கேட்டினைத் தடுத்து நிறுத்துவர். அப்பொழுது தமக்குத் துன்பம் நேர்ந்தாலும் தாங்கிக் கொள்வர். இரக்கம் என்பது பெரியவர்களின் தலையாய குணப்பண்பு. பிறர் துன்பப்படுவதையோ, தொல்லைகளுக்குட்படுத்தப்படுவதையோ கண்டு சகித்துக் கொள்ள முடியாதவர் பெரியவர். பெரியவர், அறிவுடையோர். அவர்கள் பழிபாதகங்களைக் கண்டு பயப்படுவர். ஒவ்வொரு மனிதனும் பெரியவராக உயர்வு பெறுவதையே இலட்சியமாகக் கொள்ள வேண்டும்.

பெரியவர்கள் எந்நிலைமையிலும் தந்நீர்மை குன்றாதவர். சங்கின் இயற்கை நிறம் வெண்மை. சங்கினை நெருப்பில் இட்டுச் சுட்டாலும் அதன் வெண்மை மாற மாட்டாது. பெரியவரின் நிலையும் அவ்வாறே. கொடியவறுமை வந்துற்ற போதும் சரி, வேறு கஷ்டங்கள் வந்தாலும் சரி பெரியவர்கள் தம் குணத்திலிருந்து மாறுபட்டு விடுவதில்லை. செல்வம் வந்து சேர்ந்த போதும் செருக்கோ, கர்வமோ கொள்ள மாட்டார்கள். இத்தகைய பெரியவர்களுடன் சேர்ந்து கொள்ளும் நாமும் சீலம் மிகுந்தவராக மாறிவிடலாம். நல்லவர் நட்பினை நாடிப் பெற வேண்டும். அது என்றென்றும் இனிமை தரும். அதே வேளை சிறுமையுடையோருடன் நட்புக் கொள்வது மட்டுமல்ல, பழகுவது கூடத் தீது என்பதைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

தம்மை வெறுப்பவரிடத்தும், பகைமை கொள்வோர் இடத்தும் விருப்புடன் நடந்து கொள்ளும் பாங்கு பெரியர்களிடம் காணப்படும். தூற்றுபவனையோ; புறங்கூறி நிந்திப்பவனையோ, பதிலுக்குத் தூற்றுதலோ, நிந்தித்தலோ மிக இலகுவான காரியம் யாரும் செய்து விடலாம். அவர்களுக்கும் நன்மை செய்வதே மிகக் கஷ்டமான விடயம். பெரியவர்கள் எல்லோருக்கும் நன்மையைத்தான் செய்வார்கள். பிறர் தமக்குச் செய்த தீமைகளையும் கொடுமைகளையும் பொறுத்து, அவ்வாறு தீங்கிழைத்தவர்களையும் மனதார மன்னித்து விடுவார்கள் பெரியவர்கள். அவர்களுக்கு உயர்வைத் தருவது அவர்களிடம் உள்ள பெருந்தன்மையே. காந்தியடிகள் தன்னைக் கொலை செய்யத்துணிந்த கொலைஞனை ஒன்றும் செய்து விட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். அறியாமையால் செய்த தவறைத் தாம் மன்னித்து விட்டதாகக் கூறினார். அதனால்தான் அவர் மகாத்மாவானார். பெரியவர்களின் இயல்பு, கெட்டவனையும் மன்னித்து, அவனைத் திருந்தச் செய்வதேயாகும்.

பெரியோர்க்கு ஐந்து நல்ல குணங்கள் உண்டு என்று அறநெறிச்சாரம் என்னும் நூல் கூறுகின்றது. அவையாவன: தம்மைத் தேடி வந்தவர்க்கு இல்லை என்று சொல்லாமல் கொடுத்தல்; நல்லனவற்றைப் பற்றி சிந்தித்தல்; சிந்தனையில் தோன்றிய தெளிவை ஆதாரமாகக் கொண்டு செயலாற்றுதல்; வேண்டுபவர், வேண்டாதவர் என்று பேதம் பாராமல் எல்லோரிடத்திலும் இன்முகத்தோடு பேசிப் பழகுதல்; கற்ற நூல்களை ஆராய்ச்சி செய்தல் என்பனவாகும்.

இழிந்தோர்களுக்கும் ஐந்து கெட்ட குணங்கள் இருப்பதை அறநெறிச்சாரம் உரைக்கின்றது. அவையாவன: பெரியோரைக் கனம் பண்ணாமல், அவர்களுக்குப் பணியாமல் [illegible]த்தல்; பொய் பேசுதல்; சினங் கொள்ளல்; நல்லவற்றையும் நன்றியையும் மறத்தல்; பிறர் மீது பொறாமை கொள்ளல் என்றனவே அந்த ஐந்து கெட்ட குணங்களும் ஆகும். இக்குணங்களையுடையோர் மனித குலத்திற்கு இழுக்கைத் தேடித் தருபவர்கள் ஆகின்றனர்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

மனிதப் பிறவியின் நோக்கம் மனித குலத்தையே இழிநிலைக்குக் கொண்டு வருவதல்ல. மனிதனாகப் பிறப்பது பெறுதற்கரிய பேறு. அதனினும் கடினமானது அறிவு, அறம், ஒழுக்கம் ஆகியவற்றில் சிறந்து விளங்குதல். மகாத்மா ஆக வேண்டும் என்பதே மனிதப் பிறவியெடுத்ததன் நோக்கம். மகாத்மாக்களே நல்ல குடிமக்கள். இதனை நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொண்டு அக்குறிக்கோளை எய்துவதற்கு இயன்றளவு முயன்றால், நாம் வாழும் சமுதாயம், நாடு, ஏன் முழு உலகமுமே அமைதி, சாந்தி, சமாமானம் பெற்று பொலிவு பெறும் என்பது உறுதி.

யார் மேலோர்; யார் கீழோர் என்று கேட்டால், கல்வி, கேள்வி, அறிவு, அறம், ஒழுக்கம், நடத்தை, பண்பாடு

ஆகியவற்றில் உயர்ந்தவர்களை மேலோர் என்றும் அவற்றில் தாழ்ந்து நிற்போர்களைக் கீழோர் என்றும் மனிதர்களை வகைப்படுத்திக் கூறலாம். செம்மைசால் அறிவும் சீர்திருத்த உணர்வும் கொண்ட திருவள்ளுவரே மேலோர், கீழோர், என்ற பாகுபாட்டை ஏற்றுக் கொள்கிறார். 'சிற்றினம்' என்று கீழோரைக் குறிப்பிடும் வள்ளுவர், அத்தகைய சிற்றினத்தாரோடு சேராது வாழ்தலே அறம் என்கிறார். மேலோரது நட்பை நாம் நாடிப் பெற வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்துகிறார். கீழோர் கீழ்நிலையிலேயே என்றும் இருக்க வேண்டிய நியதியில்லை. கீழோர், அடிநிலையிலேயேயிருந்து துன்பத்திற்குள்ளாகி ஈற்றில் மடிய வேண்டும் என்பது மனிதப்படைப்பின் நோக்கம் அல்ல என்பதையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். கல்வி, அறிவு, ஒழுக்கம், பண்பாடு, நன்னடத்தை, அறம் என்பவற்றில் கீழோர் ஈடுபட்டு படிப்படியாக உயர்ந்து மேலோர் ஆக அவர்களுக்கு வாய்ப்புண்டு.

தற்காலச் சமுதாயத்தில் மேலோர், கீழோர் ஆவதற்கே வாய்ப்புக்கள் நிறையக் காணப்படுகின்றன. கீழோர், மேலோராக உயர்வதற்கு வாய்ப்புக்கள் காணப்படுவது குதிரைக் கொம்பாகவே தோன்றுகிறது. நாம் காணுகின்ற காட்சிகள், கேட்கின்ற விடயங்கள், வாசிக்கின்ற நூல்கள், எமக்குக் கிடைக்கின்ற உறவுகள், தொடர்புகள் என்பவற்றில் பெரும்பாலானவை எம்மை மேலோர் ஆக்கும் என்று கூறுவதற்கில்லை. மனிதர்களின் நடை, உடை, பாவனை, பேச்சு, மூச்சு, நாகரிகம் எல்லாமே பயங்கர ஆபாசங்களாக மாறிவருகின்றன. விளம்பரங்கள், சுவரொட்டிகள் யாவும் பாலுணர்ச்சிகளைத் தூண்டும் அருவருக்கத்தக்க ஆபாசங்காளாகவே காணப்படுகின்றன. மோட்டார் வண்டிகளை ஓட்டுபவர்களிலிருந்து வாழ்க்கைப் படகை ஓட்டுபவர்கள் வரை இந்த ஆபாசங்கள் நிறைந்த படங்களைப் பார்த்துப் பார்த்து நிதானம் இழந்து விடுகின்றனர். அதனால் விபத்துக்களில் மாட்டிக் கொள்கின்றனர். தாயும் தந்தையும், பராயப்பட்ட பிள்ளைகளும், வயது முதிர்ந்த பாட்டன் பாட்டியும் சேர்ந்து காமக் களியாட்டங்கள் நிறைந்த திரைப்படங்களையும், தொலைக் காட்சிப் படங்களையும் வெட்கம் நாணமில்லாமல் நாள் முழுவதும் கண்டு களித்து இன்புறுகின்றனர் என்றால், சமுதாயம் மேல் நோக்கிச் செல்வதற்கு வாய்ப்பு எப்படி இருக்க முடியும்? ஆண்கள் பெண்கள் போலவும், பெண்கள் ஆண்கள் போலவும் அடிதலை மாறித் திரியும் போதும், ஆபாசக்களியாட்டங்கள் மலிந்து விட்ட நிலையிலும், சமூகமாந்தர்கள் கீழ்மையில் விஞ்சி விட்டனர் என்பதில் ஐயமும் உண்டோ?

கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற நிலைமை தோன்ற ஆரம்பித்ததிலிருந்தே, உலகம் கீழோர் ஆட்சியில் சிக்குண்டு மேலோர் ஆகும் வாய்ப்புக்களை இழக்கத் தொடங்கியது. எங்குகெங்கு பார்க்கிலும் தீய காட்சிகள், காமக் காட்சிகள்; கொடுமைக் காட்சிகள்; எதை எதைக் கேட்பினும் தீய பேச்சுக்கள், கொடும் பேச்சுக்கள், காம இசை, பண்பற்ற ஒலிகள், திட்டுக்கள், வசைகள். செயல்கள் தீயன; எண்ணங்கள் கொடியன; பேச்சு, மூச்சு யாவற்றிலும் நஞ்சூறிவிட்டது. கீழோர் ஆவதில் தான், நமக்கு நாட்டமும் ஆர்வமும் அதிகம்; கிடைக்கும் வாய்ப்புக்களுமே மிக அதிகம். மனிதப் பிறவியின் நோக்கம் இவ்வாறு கெட்டு அழிந்து, கீழ்மக்கள் ஆகிவிடுவதல்ல. மேலோர் ஆவதே பிறப்பின் நோக்கம். நம்மை அலைக் கழித்து உருக்குலைத்து, மேன்னிலையை அடைய விடா வண்ணம் தடுக்கின்ற தீய சிந்தனைகள், தீய காட்சிகள், தீய பேச்சுக்கள், ஆபாசங்கள், தீய செயல்கள் ஆகியவற்றின் கோரப்பிடியினின்று விடுதலை பெற வேண்டும். அதற்கு மன உறுதி வேண்டும்; துணிவு வேண்டும் மன வைராக்கியம் வேண்டும். சிந்தனையில் தூய்மை அவசியம். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் மேலோர் ஆக வேண்டும் என்று இடைவிடாது சிந்தித்து; விடாது முயற்சி செய்ய வேண்டும். கல்வி, அறிவு, பண்புப் பயிற்சி, நற்செயல்கள் புரிதல் என்பவற்றில் ஈடுபட்டு வந்தால் மேலோர் ஆகும் வாய்ப்பு உண்டு. மனித இனம் மேலான இனம். அந்தக் கௌரவத்தைக் காப்பாற்றுவது ஒவ்வொரு மனிதனின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

---

நீ உன்னைப் பலவீனன் என்று ஒருபோதும் சொல்லாதே. எழுந்து நில், தைரியமாக இரு, வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன் தோள் மீதே சுமந்து கொள். என் விதியை படைப்பவன் நீயே என்பதை அறிந்துகொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றது.

– சுவாமி விவேகானந்தர்

# கந்தபுராணம் ஆற்றுப்படுத்தும் கந்த விரதம் மூன்று

சிவ. சண்முகவடிவேல்

பண் : பழம் பஞ்சுரம் திருமுறை : 3

*திருச்சிற்றம்பலம்*

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே

உலகம் உய்ய உதித்தனன் ஒரு திரு முருகன். கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட முருகப் பெருமானின் கதையை விரித்துப் பாடுவது கந்தபுராணம்.

கந்தபுராணத்தில் கந்த விரதப் படலம் ஒன்று. முருகப் பெருமானுக்குரிய மூன்று விரதங்களின் மகிமையை வியந்து ஓதுவது கந்தவிரதப் படலம்.

## மூன்று விரதம் :

மூன்று விரதங்களும் மூன்று தன்மைகளைக் கொண்டனவாக அமைந்துள்ளன. நாள் நட்சத்திரம், திதிக்குரியவையாக ஒவ்வொன்றும் விளங்குவன. நாளை அடிப்படையாகக் கொண்டது வெள்ளிக்கிழமை விரதம். நட்சத்திரத்தை ஒட்டி அமைந்தது கார்த்திகை நோன்பு. திதியைச் சார்ந்து அனுட்டிக்கப்படுவது சட்டி விரதம்.

## வெள்ளி விரதம் :

ஐப்பசி மாத வெள்ளிக்கிழமையிலிருந்து அனுட்டிக்கத் தொடங்குவது வெள்ளிக்கிழமை விரதம். வெள்ளிக்கு முதல் நாள் வியாழக்கிழமை பகலில் ஒருபொழுது உணவு கொள்ளல் வேண்டும். அதே போலச் சனிக்கிழமையும் ஒரு பொழுது உணவு கொள்ளுதல் வேண்டும். வெள்ளிக்கிழமை உணவினைத் துறந்து உபவாசம் இருத்தல், முருகப் பெருமானுடைய, "உறுநர்த் தாங்கிய மதனுடை நோன் தாளைச் சிந்தையில் ஏற்றித் தியானம் பண்ணுதல் அதி உத்தமம். இரவில் துயிலை நீத்தல் சிறப்பு. சனிக்கிழமை பகல் உறங்கலாகா.

## கார்த்திகை விரதம் :

இவ் விரதத்தைத் திருக்கார்த்திகையிலிருந்து ஆரம்பிக்கலாம். திருக்கார்த்திகை – கார்த்திகை மாசத்துக் கார்த்திகை நட்சத்திர நாளாகும். முதல் நாள் பரணி நாளில் பிற்பகலில் உணவினைக் கொள்ளுதல், கார்த்திகை நாளில் உணவினை விலக்குதல். இராக் காலத்தில் உறக்கத்தைத் துறத்தல். அடுத்த ரோகிணி நாளில் பாரணம் பண்ணுதல்.

## சட்டி விரதம் :

ஐப்பசி மாதம் – பிரதமை முதலாக ஆறு நாட்கள் நோற்றல். அந்நாளிலிருந்தே விரதத்தைத் தொடங்கலாம். ஆறு நாட்கள் உபவசித்திருத்தல். (தேகாரோக்கிய சௌக்கிய நிலையை அனுசரித்து உபவசித்தலைத் தீர்மானிக்கலாம்.) சட்டிக்கு மறுநாள் விதிவழி நின்று பாரணம் பண்ணலாம்.

## பொது விதி :

மூன்று விரதங்களில் எதை நோற்றாலும் இராக்காலத்தில் துயில் நீத்தல், பகலில் கண் உறங்காதிருத்தல், முருகப் பெருமானின் பூசை வழிபாடுகளைத் தரிசித்தல், திருப்புகழ், புராணம், படித்தல் – கேட்டல், பாரணம் விதி முறை செய்யும் போதில் அடியார்களை அமுது செய்வித்தல், அந்தணப் பெருமக்களுக்குத் தானம் தக்கணை ஈதல், சுற்றம் தழுவுதல் ஆகியன நற்பயன் நல்கும்.

## விரத கால அளவு

வெள்ளிக்கிழமை விரதம் மூன்று ஆண்டுக்காலம். கார்த்திகை விரதம் பன்னீராண்டுக் காலம். சட்டி விரதம் ஆறு ஆண்டுக் காலம். மூன்று விரதங்களுக்கும் ஆண்டுக் காலம் வேறுபாடு கொண்டது. விரத நாட்கள் ஒரே அளவுடையது வியப்பிற்குரியது.

| | | | |
|---|---|---|---|
| வெள்ளி நாள் விரதம் | 1 ஆண்டு | 52 x 03 = | 156 நாள் |
| கார்த்திகை விரதம் | 1 ஆண்டு | 13 x 12 = | 156 நாள் |
| சட்டி விரதம் | 1 ஆண்டு | 26 x 06 = | 156 நாள் |

ஒவ்வொரு விரதமும் தனித்தனியாக 156 நாட்கள் கொண்டவை.

### சங்கற்பம் :

எவராக இருந்தாலும் அவர் தமது சிந்தையில் எண்ணம் முற்றுப்பெற விரத ஆரம்பத்தன்று வரித்துக் கொள்ள வேண்டும். 'நான் இன்னதை மனத்திற் கொண்டு முருகப் பெருமானுக்குரிய இந்த விரதத்தை இத்தனை ஆண்டுக்காலம் அனுட்டிப்பேன்' என்று அந்தக் கால எல்லை வரை அந்த விரதத்தை இந்த ஆலயத்தில் விதிப்படி உத்தியாபனம் செய்து நிறைவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். உத்தியாபனம் செய்து கட்டு அழிக்க முன்பு வேறும் ஒரு நோன்பை நோற்றல் பயனற்றது.

### நோற்றவர் :

பகீரத மன்னன் வெள்ளி நாள் விரதத்தை விரும்பி நோற்றான். நாரத முனிவர் கார்த்திகை நோன்பைக் கைக்கொண்டார். அமரர், முனிவர் சட்டித் தவத்தைச் சாதித்தார்கள்.

### பெற்ற பேறு :

பகீரதன் நோற்றிடும் அளவில் முருகப் பெருமானின் செவ்வேல் வந்தது. பகைவன் உயிரை உண்டது. வேல் வல்விரைந்து மீண்டு சென்றது. பகீரதப் பேர்ப்புரவலன் தன்னூர் எய்தினான். கோரன் அபகரித்த ஏற்ற தன் தொல் அரசு எய்தப்பெற்றான்.

நாதர முனிவர் ஏழு வகை முனிவோருக்குள் ஏற்றமாம் பதத்தைப் பெற்றார்.

அரசன் ஒருவன் நோற்று அந்திமான் என்ற பெயரோடு அரசாளப் பெற்றான். வேடன் நோற்றுச் சந்திமான் என்ற பெயரோடு புவி புரந்தான்.

அமரரும் முனிவரும் தாரணி அவுணர் கொண்ட தம்பதத் தலைமை பெற்றார்.

### ஆற்றுப்படுத்திய அருமொழி :

பகீரதனுக்கு வெள்ளி நாள் விரதத்தை விளக்கியவர் பார்க்கவன் – அசரகுரு.

"வேற்கரன் மகிழ மாற்றால் வெள்ளி நாள் விரதந்தன்னை; நோற்குதி மூன்றி யாண்டு நுங்களுக் கல்லல் செய்த மூர்க்கனும் முடிவன் நீயே முழுதுல காள்வை" என்றான். நாரத முனிவருக்கு நன்குணர்த்தியவர் வாரணமுகத்து வள்ளல்.

"...... ஆறுமா முகத்து நம்பி பொன்னடி வழிபாடாற்றிப் பொருவில்கார்த் திகைநாள் நோன்பைப் பன்னிரு வருடங் காறும் பரிவுடன் புரிதி என்றான்."

### வசிட்டர் வாய்மொழி :

முன்னொரு நாளில் முசுகுந்தன் வசிட்ட முனிவரின் இருக்கையை அடைந்தான். வசிட்டரின் பாதங்களை வணங்கினான்.

"கந்தவேள் விரத மெல்லாங் கட்டுரை பெரியோய்' என்று பெரிதும் போற்றினான்.

"மைந்த நீ கேட்பாய்" என்று வசிட்ட முனிவர் வழுவாது உரைத்தார். முருகப் பெருமானின் விரத மான்மியத்தால் முன்னவர்கள் பெற்ற பேற்றை எல்லாம் முசுகுந்தன் முழுதொருங்கு உணர்ந்து கொண்டான்.

"எந்தாய் நன்று. நான் இந்த விரதங்கள் புரிவேன்" என்றான். நனி பெரு வேட்கை கொண்டான். அன்று தொட்டு அளவில்லாத காலம் அவ்விரதங்கள் ஆற்றினான். "குன்றெறி ஐயன் குரைகழல் உன்னி நோற்றான் முசுகுந்தன்.

### முசுகுந்தன் :

முசு – குரங்கு. முசுகுந்தன் குரங்கு முகம் உடையவன். குரங்கு முகத்தையும் தானாக வேண்டிப் பெற்றவன் முசுகுந்தன். குரங்காகவே திருகயிலாய மலையில் இருந்தவன் அவன். குரங்கு வில்வ மரத்தில் இருந்தது. பத்திரங்களைப் பறித்துத் தூர்த்தது. அது எம்பெருமானுக்குப் பூசை புரிவது போலாயிற்று. அது கண்டு மகிழ்ந்த இறைவன், 'நீ மனுக்குலத்து உதித்து மன்னனாகப் புவிக்கரசு செலுத்துவாய். பின்னர் திருக்கயிலைக்கு வருவாய்." என அருளினர்.

மானுட வாழ்வில் மயங்குவேன். பெருமானை மறந்து விடுவேன். நான் என்றும் மறவாதிருக்க முகம் இந்த முசுவாக ஏனைய அவயவம் மானுட வடிவாகக் கேட்டுப் பெற்றனன்.

முசுகுந்தன் தவத்திற்கு மகிழ்ந்து ஆறுமா முகமுடைய வள்ளல் அருளுவான் வந்தார்.

"அந்தமில் பகல் விரதங்கள் ஆற்றினை. எந்த நல்வரம் வேண்டினை?" என்றருளினர்.

"உலகமெல்லாம் என் செங்கோலில் நடக்க வேண்டும். வீரபாகு தேவர் முதல் வீரரை எல்லாம் துணைவராகத் தருதல் வேண்டும்." என்றான்.

முசுமுகமுடையவன் கேட்ட வரம் கொடுத்தனர் ; முருகப்பெருமான். மன்னவன் ஆணையும் கோலும் எங்குஞ் சென்றது.

இந்திரன் அழைப்பை ஏற்று இமையவர் உலகு சென்றான் முசுகுந்தன். அங்கு வலாசுரனை வெல்லப் பேருதவி புரிந்தான். நன்றி மறவாத மன்னன் உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டான்.

இந்திரன் மாளிகையில் முசுகுந்தன் சோமாஸ்கந்தப் பெருமானைக் கண்டான். மாவின் முகம் வாங்கியும் மயங்கிய மன்னன், வீதிவிடங்கப் பெருமானைத் தருப்படி கேட்டான். கொடுக்க மனமில்லாத இந்திரன், தெய்வ கம்மியனைக் கொண்டு வேறு வேறாக ஆறு திருவுருவங்களை அமைத்துக் கொடுத்தான்.

வீதிவிடங்கப் பெருமானாக இருந்தும் ஏதும் உரையாத தன்மையால் இவர் அவர் அன்று என உரைத்தான். பின்னர் நாராயணன் பூசித்த வீதிவிடங்கப் பெருமானுடன் எழுவரையும் கொடுத்தான்.

திருவாரூர், நாகபட்டினம், திருநள்ளாறு, திருக்காருயில் திருக்கோளிலி திருவாய்மூர், திருமறைக்காடு திருத்தலங்களில் ஒரு நாளில் எழுவரையும் வென்றியரி யணைமீதில் விதிமுறையால் தாபித்தான். விழாக் கொண்டாடினான். கருவூரில் பலகாலம் அரசு செய்தான். பின்னர் துண்ணனவே நோற்றிருந்து தொல்கயிலைதனை அடைந்தான். ஆனபடியால் அயன் அறியாத அருமறையின் குடிலையைத் தெரிந்தவர் முருகப்பெருமான். அவருக்குரிய வெள்ளி, கார்த்திகை, சட்டி விரதங்களை எவராயினும் அனுட்டித்தால் நினைந்தவெல்லாம் மகிழ்வோடு அடைவார்கள். அதுவும் விரைவில் பெறுவார்கள். அவர்களை வான் உலகத்துத் தேவர்களும் வந்து வணங்குவார்கள்.

அக்கருத்து கச்சியப்பரின் அழுத்தம் திருத்தமான திருவாக்கில் இவ்வாறு காணலாம் :

*"ஆகையால் அயன்அறியா அருமறைமூ லந்தெரிந்த*
*ஏகநா யகன்வி ரதம் எவரேனும் போற்றியிடின்*
*ஒகையால் நினைந்தவெலாம் ஒல்லைதனில் பெற்றிடுவர்*
*மாகமேல் இமையவரும் வந்தவரை வணங்குவரே."*

---

# பகவத் கீதை

பகவத்கீதையை பகவான் பகர்ந்தது பார்த்தனுக்காய் மட்டுமல்ல படித்தாரும், பாமரரும் ஏன் பாரில் உள்ளவர்கள் எல்லாம் பயன்பெறுவதற்கும், இன்பதுன்பங்களினதும் இம்மையினதும் உண்மையை உள்ளக்கண் கொண்டு கருத்தூன்றி ஆய்ந்து கவலைகளை களைந்து இன்பக்கடலில் திளைத்து, இவைதம் உண்மைநிலை உணர்ந்து இவ்வையத்து பிறந்துள்ள ஆன்மாக்கள் எல்லாம் பதியின் பாதக்கமலங்களை அடைவதற்குமாகும்.

பகவத்கீதை, தனது பதினெண் அத்தியாயங்களுள் ஆத்மீக கருத்துக்களை மட்டுமல்ல உயர் தத்துவங்களையும் தருகின்றது. உண்டிமுதல் உறக்கம் வரை, பந்த பாசங்கள் முதல் படை கொண்டு புரியும் யுத்ததர்மம் வரை, நித்திய கருமம் முதல் சத்திய கருமம் வரை, வர்ண ஆச்சிரம தர்மம் முதல் சமத்துவ கொள்கை வரை விளக்குகின்றது.

இது இந்துமதம் தந்த உலகின் முதல் வாழ்க்கை ஆலோசனை (Counselling) நூல் எனில் மிகையாகாது. கீதையினை சற்று உற்று நோக்கின் கலங்கி நிற்கின்ற பார்த்திபனுக்கு அவற்றை தெளிந்து விளங்கும் பார்த்தசாரதிக்கும் இடையே நிகழும் உரையாடலாகவே அமைகின்றது. உலகியலில் உழலும் நம் உள்ளத்து மாற்றங்களுக்கும், ஐயங்களுக்கும், கலக்கங்களுக்கும் விடை பகர்வதாய் திகழ்கின்றது.

பகவத்கீதையின் பதினெண் அத்தியாயங்களுள் ஒரு பொழுது தெளிந்து, ஒரு பொழுது அவாவி, ஒருபொழுது மயங்கி நிற்கும் நம் மனத்தின் மாற்றங்களை நம்குணத்தில் ஏற்படும் கோபம், தாபம், கலக்கம் முதலிய வேறுபாடுகளை விளக்கி இவை எல்லாம் மாயை பற்றியுள்ளதாலே ஆன்மா பெறுகின்ற குணவியல்புகள் என தெளிவுபடுத்துகின்றது.

*செல்வி. சி. கந்தவனம்*

# 1999 அகில இலங்கை

## (இந்துமத நிறுவனங்களினதும் அற

## நாட்காட்டி

Legend: (n) = circled, [n] = boxed

**JANUARY**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | [15] | 16 | 17 |
| 18 | [19] | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | (31) |

**FEBRUARY**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | [4] | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | [14] |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |

**MARCH**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| (1) | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| [29] | 30 | (31) | | | | |

**APRIL**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | [2] | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | [13] | [14] | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | (30) | | |

**MAY**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | [1] | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | (29) | [(30)] |

**JUNE**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | [27] |
| (28) | 29 | 30 | | | | |

**JULY**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | (28) | 29 | 30 | 31 | |

**AUGUST**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | (26) | 27 | 28 | 29 |

**SEPTEMBER**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | (25) | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

**OCTOBER**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | (24) |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**NOVEMBER**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | [7] |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| (22) | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

**DECEMBER**

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | (22) | 23 | 24 | [25] | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

○ போயா விடுமுறை தினம்　□ அரச - வங்கி விடுமுறை தினம்

## மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் சமய வைபவங்கள்

### நடேசர் அபிஷேகம்

| | | |
|---|---|---|
| 28. 02. 1999 | (ஞாயிறு) | சுக்கில பட்ச சதுர்த்தசி |
| 08. 05. 1999 | (சனி) | திருவோணம் |
| 21. 06. 1999 | (திங்கள்) | ஆனி உத்தரம் |
| 25. 08. 1999 | (புதன்) | சுக்கில பட்ச சதுர்த்தசி |
| 24. 09. 1999 | (வெள்ளி) | சுக்கில பட்ச சதுர்த்தசி |
| 23. 12. 1999 | (வியாழன்) | திருவாதிரை |

### வருடாபிஷேகம்

30. 04. 1999 வெள்ளிக்கிழமை

19.07.1999 -(திங்கள்)

சுவாமி விபுலானந்தர் நினைவு தினம்

05.12.1999 - (ஞாயிறு)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு தினம்

### சமயகுரவர் குருபூசைத் தினங்கள்

10. 05. 1999 (திங்கள்) திருநாவுக்கரசு நாயனார்
01. 06. 1999 (செவ்வாய்) திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்
16. 07. 1999 (வெள்ளி) மாணிக்கவாசக சுவாமிகள்
17. 08. 1999 (செவ்வாய்) சுந்தர மூர்த்தி நாயனார்.

*அகில இலங்கை இந்து மாமன்றம், 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 2.*
*தொலைபேசி இல. 434990 தொலைப் பதிவு (Fax) இல. 344720*

## இந்துக்களின் விசேஷ தினங்களும் விரத நாட்களும்

### ஜனவரி

01 பூரணை
02 ஆர்த்திரா தரிசனம்
13 ஏகாதசி
15 தைப்பொங்கல், பிரதோஷம்
17 அமாவாசை
21 சதுர்த்தி
23 சஷ்டி
26 கார்த்திகை
27 ஏகாதசி
29 பிரதோஷம்
31 பூரணை, தைப்பூசம்

### பெப்ரவரி

12 ஏகாதசி
13 சனிப் பிரதோஷம்
14 மகா சிவராத்திரி
15 அமாவாசை
19 சதுர்த்தி
21 சஷ்டி
22 கார்த்திகை
27 சனிப்பிரதோஷம்

### மார்ச்

01 பூரணை, மாசி மகம்
13 ஏகாதசி
15 பிரதோஷம்
17 அமாவாசை
21 சதுர்த்தி
22 கார்த்திகை, சஷ்டி
27 ஏகாதசி
29 பிரதோஷம்
31 பூரணை, பங்குனி உத்தரம்.

### ஏப்ரல்

13 பிரதோஷம்
14 பிரமாதி வருஷப் பிறப்பு
15 அமாவாசை
18 கார்த்திகை
19 சதுர்த்தி
21 சஷ்டி
26 ஏகாதசி
27 பிரதோஷம்
30 பூரணை, சித்திரகுப்த விரதம்

### மே

11 ஏகாதசி
13 பிரதோஷம்
15 அமாவாசை, கார்த்திகை
18 சதுர்த்தி
20 சஷ்டி
25 ஏகாதசி
27 பிரதோஷம்
29 பூரணை, வைகாசி விசாகம்

### ஜூன்

10 ஏகாதசி
11 பிரதோஷம்
12 கார்த்திகை
13 அமாவாசை
17 சதுர்த்தி
19 சஷ்டி
21 ஆனி உத்தரம்
24 ஏகாதசி
26 சனிப் பிரதோஷம்
28 பூரணை

### ஜூலை

09 ஏகாதசி, கார்த்திகை
10 சனிப்பிரதோஷம்
12 அமாவாசை
16 சதுர்த்தி
18 சஷ்டி
24 ஏகாதசி
25 பிரதோஷம்
28 பூரணை

### ஆகஸ்ட்

05 கார்த்திகை
07 ஏகாதசி
09 பிரதோஷம்
11 ஆடி அமாவாசை
13 ஆடிப்பூரம்
15 சதுர்த்தி
17 சஷ்டி
22 ஏகாதசி
24 பிரதோஷம்
25 ஆவணி ஓணம்
26 பூரணை

### செப்டம்பர்

02 கார்த்திகை
06 ஏகாதசி
07 பிரதோஷம்
09 அமாவாசை
13 ஆவணி சதுர்த்தி
15 சஷ்டி
21 ஏகாதசி
23 பிரதோஷம்
25 பௌர்ணமி
29 கார்த்திகை

### அக்டோபர்

05 ஏகாதசி
06 பிரதோஷம்
08 கேதாரேஸ்வர விரதம்
09 அமாவாசை
10 நவராத்திரி விரதாரம்பம்
13 சதுர்த்தி
15 சஷ்டி
18 சரஸ்வதி பூஜை
19 விஜயதசமி
21 ஏகாதசி
22 பிரதோஷம்
24 பௌர்ணமி
26 கார்த்திகை

### நவம்பர்

04 ஏகாதசி
05 பிரதோஷம்
07 அமாவாசை,
கேதார கௌரி விரதம்
08 ஸ்கந்த சஷ்டி விரதாரம்பம்
12 சதுர்த்தி
14 ஸ்கந்த சஷ்டி விரதம்
19 ஏகாதசி
21 பிரதோஷம்
22 பௌர்ணமி
23 திருக்கார்த்திகை
24 விநாயக விரதாரம்பம்

### டிசம்பர்

03 ஏகாதசி
05 பிரதோஷம்
07 அமாவாசை
11 சதுர்த்தி
13 விநாயக சஷ்டி விரதம்
14 திருவெம்பாவை பூஜாரம்பம்
19 சுவர்க்கவாயில் ஏகாதசி
20 பிரதோஷம், கார்த்திகை
22 பூரணை
23 ஆர்த்திரா தரிசனம்

ஆன்மீகக் கதை

# தல தீர்த்த யாத்திரைகளின் பயன்

நர்மதை நதி பாய்கின்ற தீர்த்தத்தைச் சார்ந்ததாகக் கர்ணகி என்ற ஒரு சிற்றூர் இருந்தது. இக் கிராமத்தில் பிராமணன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் காசியாத்திரை செய்ய வேண்டுமென நீண்ட நாட்களாக ஆசைப்பட்டிருந்தான்.

ஒரு நாள் தன்னிரு புத்திரர்களையும் அழைத்துநான் காசியாத்திரை போகின்றேன். அதனால் உங்கள் தாயாரை கவனமாகப் பராமரிக்க வேண்டுமெனக் கூறித் தன்துணைவியை ஒப்படைத்து விட்டுச் சென்றான்.

தந்தை காசிக்குச் சென்றபின், இரண்டு ஆண்மக்களும் தங்கள் அருமைத்தாயை, மனம் கோணாது அன்புடன் பேணிப் பாதுகாத்து வந்தார்கள். தாய்க்கு மரணகாலம் நெருங்கியது. அதனால் தாய், அன்புடன் தனது இரு ஆண்பிள்ளைகளையும் அழைத்து, நான் இறந்தபின் என்னை எரித்த சாம்பலை காசிக் கங்கையிற் கரைத்து விடும்படி கூறினாள். மக்களும் அதற்கு உடன்பட்டார்கள்.

எதிர்பார்த்தபடி ஒரு நாள் அத்தாய் இறந்து விட்டாள். இரு மக்களும் விதிப்படி தாயின் உயிரற்ற உடலை எரித்து அதன் சாம்பலை எடுத்துகொண்டு மூத்த மகன் ஓர் உதவியாளனின் உதவியோடு காசிக்குச் சென்றான்.

காசி வெகு தூரம். அதனால் அவர்கள் விரைவாக நடந்த போதும் காசியை அடைய முடியவில்லை. ஒரு சிறிய கிராமத்தில் ஒரு அந்தணன் வீட்டில், நாங்கள் நாளைக் காலை புறப்படுகின்றோம் என்று தங்கினார்கள்.

அந்த வீட்டுக்காரன் அப்போது ஓர் வெண்மையான பசுவில் பால் கறப்பதற்காக, அதன் கன்றை அவிழ்த்தான். அது முரண்டு பண்ணவே, அந்தணன் சிறிதும் இரக்கமில்லாது அடிஅடியென்று அடித்தான். பின் ஒருவாறு பால் கறந்து விட்டான்.

சாப்பிட்ட பின் எல்லோரும் உறங்கி விட்டனர். வழிப் போக்கனாக வந்த அந்தணனுக்கு நித்திரை வரவில்லை. அதனால் அவன் வெளித்திண்ணையில் வந்து படுத்தான்.

அப்போது தாய்ப்பசு அழுதது. "அம்மா ஏன் அழுகிறாய்" என்று பசுவின் கன்று கேட்டது. "இந்த எசமானன் எப்படி உனக்கு அடித்தான். என் வயிறு எரிகிறது." நாளைக்கு இவனுடைய மகனை எனது கூரிய கொம்பால் குத்திக் கொல்வேன் என்றது தாய்ப்பசு.

"அம்மா அப்படிச் செய்யாதே. நாம் பூர்வீகத்தில் பாவம் செய்து விட்டோம். அதுதான் இந்தத் துன்பப்படுகிறோம். இன்னும் நீ எசமானின் மகனைக் கொன்றால் பிரமகத்தி தோஷம் என்னும் பெரிய பாவம் வரும் என்றது" அந்தக் கன்றுக் குட்டி. "பயப்படாதே மகனே! பகுத்தறிவில் சிறந்தவன் மனிதன். அப்படியிருந்தும் இவ்வாறு அடித்துவிட்டான் உன்துன்பங் கண்டு நான் படும் வேதனையை இந்த எசமானனும் படவேண்டும். என் வேதனைபோல் அவனும் துடிக்க வேண்டும்" என்றது.

இவற்றை வழிப்போக்கனான அந்தணன் கேட்டான். அவனுக்கு மிருகங்கள், பறவைகள், ஊர்வன என்பவற்றின் பாஷைகள் நன்றாகத் தெரிந்திருந்தது.

மறுநாட் காலை சூரியன் உதித்தான். எல்லாரும் எழுந்தார்கள். வழிப் போக்கனான அந்தணன் எழுந்து நேரம் கடத்தி வழிப்பயணம் செய்வதாகக் கூறினான். இரவில் தாய்ப் பசுவும் கன்றும் பேசிக் கொண்டதை அறிந்த வழிப்போக்கன் என்ன நடக்கப் போகிறது என்ற ஆவலால் அவ்வாறு கூறினான்.

வீட்டு எசமானன் தன் மனைவியை நோக்கி, இன்று நீ பசுவில் பால் கற. அவசரமாக நான் ஓரிடம் செல்ல வேண்டுமெனக்கூறிச் சென்று விட்டான். மனைவி பசுவில் பால் கறக்க ஆயத்தமாய் மகனைக் கன்றை அவிழ்த்து வரும்படி பணித்தாள். மகன் கன்றை அவிழ்த்து வந்தான். கன்றுடன் பசுவை அணுகினான். பசு பாய்ந்து தனது கூரிய கொம்பால் சிறுவனின் வயிற்றில் குத்திக் குடலை இழுத்தது.

இதனைக் கண்டவர்கள் பசுவை அடித்தார்கள். பசு அறுத்துக் கொண்டு ஓடியது. பசுவைப் பிரமகத்தி தோஷம் பிடித்தது. இதனால் வெண்மையான பசு கருமையாகி விட்டது.

அந்தப் பசுவின் பின்னால் வழிப்போக்கனான அந்தணனும் உதவியாக வந்தவனும் ஓடினார்கள். கறுத்துவிட்ட அந்தப்பசு நர்மதை நதியில் இறங்கிக் குளித்தது. அதனால் அதன் பிரமகத்தி தோஷம் விலகிவிட்டது. பசு முன்போல வெண்மையானது.

இவற்றையெல்லாம் கண்டு ஆச்சரியப்பட்டான் வழிப்போக்கனான அந்தணன். நீயும் உன்னுடைய தாயாரின் சாம்பலை இந்த நர்மதை நதியில் கரைத்து மூழ்கு என்றது அசரீரி. அவ்வாறே அந்தணன் சாம்பலைக் கரைத்து விட்டு மூழ்கினான். பின்னர் செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்தான்.

அப்போது இறந்து போன அவனுடைய தாயார் தூய வெண்துகிலாடையுடன் நர்மதை நதியில் தோன்றி, மகனை ஆசீர்வதித்தபின் ஆகாய மார்க்கமாகப் பறந்து சென்று முத்தியின்பம் அடைந்தாள். அந்தணனும் சந்தோஷத்தோடு தனது உதவியாளருடன் தன்னூர்க்குத் திரும்பினான்.

ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜீ

# சைவ சித்தாந்தம் கூறும் மோட்சம்

இந்து மதத்தினுடைய தத்துவ நூல்களில் சைவ சித்தாந்தமும் ஒன்று. இதில் இந்து மதத்திலே பேசப்படுகின்ற மோட்சக் கோட்பாடு பற்றியும் கூறுகின்றது. சைவ சித்தாந்தம் ஆன்மாக்களின் இலட்சியமாக மோட்சத்தை கூறுகின்றது. மோட்சம் என்றால் விடுபடுதல் என்று கருத்து. அது பிறவியில் நின்றும் விடுபடுதலை குறித்து நிற்கின்றது. மெய்கண்ட சாஸ்திரங்களின் கருத்துப்படி சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற மார்க்கங்களின் பலனாக ஞானம் ஏற்படுமிடத்து நன்மை தீமைகள் ஆகிய வினைகளும், வினைப் பயன்களும் வேறு வேறாகக் காணப்படமாட்டாது. ஒன்றிலே விருப்பும் ஒன்றிலே வெறுப்பும் இன்றி, புண்ணியம் பாவம் இரண்டிலும் அவற்றின் பயன்களிலும் ஒரே தன்மையுடையதாக இருத்தலே இருவினையொப்பு எனப்படும் என்று சிவஞான முனிவர் விளக்கம் கொடுக்கின்றார். இருவினையொப்பு ஏற்படுமிடத்து இறைவனது திருவருள் ஆன்மா மீது பதியும் என்பதை உமாபதி சிவாச்சாரியார்,

"நீடும் இருவினைகள் நேராக நேராதல்
கூடும் இறைசக்தி கொளல்"

என்று கூறுகின்றார். அதாவது வளர்ந்து வருவனவாகிய புண்ணிய பாவங்கள் எனும் இரண்டு வினைகளும் முன்னர் ஒன்றை ஒன்று ஒவ்வாதனவாக இருந்தன. இப்போது ஒத்த தன்மையுடையவை என்ற எண்ணம் ஆன்மாவிற்கு உண்டாக அதன்மீது திருவருள் சக்தி பதியும். சிவஞானசித்தியார் பக்குவமடைந்த ஆன்மாக்களுக்கு இறைவன் குருவடிவாக எழுந்தருளிவந்து மோட்சத்தைக் கொடுப்பவன் என்பதை

"மன்னவன் தன் மகன் – வேடரிடத்தேதங்கி"

என்ற பாடலின் மூலம் விளங்குகின்றது. அதாவது அரசகுமாரன் ஒருவன் இளமைப் பருவத்தில் வேடரித்தே அகப்பட்டு, அவரோடு கூடி இழி தொழில் செய்து வளர்ந்து பருவம் வந்த இடத்து தனது தந்தையாகிய அரசனையும் தன்மையும் அறியாது மயங்கி நிற்க, பின்னர் அவ் அரசனும் நீ எனது மகன் என்று அறிவுறுத்தி அவ் வேடரின்றும் அவனைப் பிரிந்து பெருந்தன்மையோடு அரசனாக்கி ஆதரித்தல் போல அறியாமையினால் ஐம்பொறிகளால் வேடரின் சுழற்சியிலே பட்டு, தன்னையும் தலைவனையும் அறியாது வருந்துகின்ற உயிரை, இறைவன் அருளே திருமேனியாக திருவடிவம் கொண்டு எழுந்தருளி வந்து உபதேசித்து ஐம் பொறிகளில் நின்றும் நீக்கி தன் வண்ணம் ஆக்கி தனது திருவடிக்கீழ் வைப்பான் என கூறுகின்றது.

சைவசித்தாந்திகள் மோட்சம் பற்றிய கருத்துக்களை விளக்குமிடத்து சீவன்முத்தி, விரோதமுத்தி என்ற இரண்டுவகை முத்திகளை விளக்குகின்றனர். சீவன் முத்தர்கள் உடலோடு கூடி இருந்தாலும் உலகப் பற்றுகள் பாசங்களில் இருந்து விடுபட்டவர்களாவார்கள். இவர்கள் சிவனடியார்களையும் ஆலயங்களையும் சிவன் எனவே கண்டு வழிபடுவார்கள். இவர்கள் உடல் நீங்கப் பெற்ற பின்னர் பரமுத்தியை அடைவர் என்று கூறப்படுகின்றது. இம் முத்தியிலே ஆன்மாவானது இறைவனுடன் இரண்டறக் கலந்து விடுகின்றது. இது சுத்த அவத்தை முத்தி என்று அழைக்கப்படும். அதாவது ஆன்மாவும் இறைவனும் இரண்டறக் கலந்தாலும் அவற்றினை ஒன்று எனவும் கூற முடியாது. இரண்டு எனவும் கூறமுடியாது. இதனை விளக்க சைவசித்தாந்திகள் தாழ்தலை (தாடலை) என்ற இரண்டு சொற்களில் புணர்ச்சியினைக் காட்டுகின்றனர். திருவருட்பயன் ஆசிரியர்

"தாடலை போற் கூடியவை தானிகளா வேற்றின்பக்
கூடலை நீ ஏகம் எனக் கொள்"

என விளக்குகின்றார். அதாவது தாழ்தலை என்ற சொற்கள் சேர்ந்து தாடலை என்று வரும் போது அதனை ஒரு சொல் எனவும் கூறமுடியாது இரு சொல் எனவும் கூறமுடியாது. இதே போல் ஆன்மாவும் இறைவனும் கலக்கின்ற நிலை அத்துவிதமாகும். ஒன்றாலும் ஒன்றாது. இரண்டாலும் ஓசை எழாது என்றால் ஒன்றன்று இரண்டுமில் என்ற திருவருட் பயன் பாடலில் மோட்சத்தை விளக்குகின்றது. அதாவது இறைவனும் ஆன்மாவும் ஏற்கனவே ஒரு பொருளாக இருந்தால் பின்னர் அவை மோட்சத்தில் வேறு வேறாக நிற்பதற்கு நிலையும் இல்லை. எனவே ஆன்மாவும் இறைவனும் ஒன்றும் அல்ல இரண்டும் அல்ல எனக் கூறக்கூடிய வகையில் மோட்சத்தில் கலந்து விளங்குகின்றது. இவ்வாறான மோட்சம் பற்றிய கருத்துக்கள் சைவ சித்தாந்தத்திலே காணப்படுகின்றது.

**ப. சதீசன்**
க. பொ. த. உயர்தரம் (கலைப்பிரிவு)
பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு.

பரிசுக் கட்டுரை

# எழுமின் விழிமின்

*(சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு மாமன்றம் நடத்திய கட்டுரைப் போட்டியில் நான்காவது பிரிவில் (ஆராய்ச்சிக் கட்டுரை) முதலாவது பரிசைப் பெறும் கட்டுரை)*

இ. கோபாலபிள்ளை

இந்துமத வளர்ச்சிக்குத் தொண்டுகள் பலபுரிந்து இந்துமதத்தின் சிறப்பினை உலகறியச் செய்த மகான்கள், ஞானியர்கள் பலராவர். அத்தகையோர் வரிசையிலே மாபெருந்துறவியாக, மகானாக, தீர்க்கதரிசியாக, தேசபக்தராக, உலகம் போற்றும் உத்தமராகப் போற்றப்படுபவர் சுவாமி விவேகானந்தராவார். அன்னாரவர்கள் இந்துமதத்தின் உயர்ச்சிக்கும், மனிதகுல மேம்பாட்டுக்கும் ஆற்றிய பணிகள் காலமுள்ளளவும் நினைவு கூரத்தக்கதாகும். சுவாமி விவேகானந்தரது சிறப்புக்களை வெளிப்படுத்துவதாயமைவதே அன்னாரவர்களது இதயநாதமாய் ஒலிக்கும் "எழுமின் விழிமின்" என்ற நாத தத்துவம்.

சுவாமி விவேகானந்தர் வங்காளத்திலே கல்கத்தாவில் 1863 ம் ஆண்டு அவதரித்தார். நரேந்திரன் என்னும் இளமைப் பெயர் கொண்ட சுவாமி விவேகானந்தர் இளமையில் வங்காளி ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகியவற்றிலே மிகுந்த பயிற்சியும், போதனாசக்தியும் கொண்டவராக விளங்கினார். இளமையிற் கல்வியை முடித்துக் கொண்ட சுவாமி விவேகானந்தர் இறைவனைக் காண வேண்டும் என்ற சிந்தனை உந்தப்பெற, அனுபவ ஞானமும் இறையனுபவமும் மிக்க சுவாமி இராமகிருஷ்ண பரமகம்சரது போதனைகளால் ஈர்க்கப்பட்டார். சுவாமி இராமகிருஷ்ண பரமகம்சரைத் தமது குருவாகக் கொண்டு ஞானோபதேசம் பெற்றதோடு சந்நியாசம் புகுந்து பெருந்துறவியானார் சுவாமி விவேகானந்தர். அன்று முதல் சுவாமி இராமகிருஷ்ண பரமகம்சரது போதனைகளைப் பரப்பவும், மனிதகுல மேம்பாட்டுக்குத் தொண்டாற்றவும் சுவாமி விவேகானந்தர் தம்மை அர்ப்பணித்தார். அவர் உலக மக்களை மேம்படுத்த வழிகாட்டிய வாசகமே எழுமின் விழிமின் என்ற உயர் சிந்தனையாகும்.

இந்துமத மறுமலர்ச்சிக்கும், ஆன்மீக ஒருமைப் பாட்டுக்கும், மனிதகுல மேம்பாட்டுக்கும், அளப்பரிய தொண்டாற்றியவர் சுவாமி விவேகானந்தர் ஆவார். எழுமின் விழிமின் குறிக்கோளினை அடையும் வரை பணி செய்வோம் என மனிதகுலத்தை வேண்டியவர் சுவாமி விவேகானந்தர் ஆவார். இந்திய வரலாற்றிலே பிரித்தானியர் ஆட்சிக்காலம் முக்கியமானதோர் காலகட்டமெனக் கொள்ள முடியும். ஆங்கிலேயர் ஆட்சியில் ஆங்கில நாகரிகமும் ஆங்கில மோகமும் தலைதூக்கியிருந்தது. இந்துக்களது சமயநம்பிக்கைகளும், சம்பிரதாயங்களும் சிதைவுற்று இந்துப் பண்பாடு சீரழிந்து மூச்சுக்குன்றி ஆன்மீக உணர்வு நிலை தளர்ந்திருந்தது. இத்தகையதோர் நிலையிலே தூங்கிக்கிடந்த பாரதமக்களைத் தட்டியெழுப்பி இந்துமதத்தின் இருளையகற்றத் தோன்றிய மறுமலர்ச்சியாளரே சுவாமி விவேகானந்தர் ஆவார். சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ண பரமகம்சரது போதனைகளைச் சிரமேற் கொண்டு "எழுமின் விழிமின்" என்ற உயர்ந்த தத்துவத்திற்கேற்ப உலகமக்கள் சமுதாயம் உய்வடையும் நெறிமுறைகளை உவந்தளித்தார். மனவுறுதி, ஆண்மை, அன்பு, பொறுமை, ஞானம், தியாகம், சேவை மனப்பான்மை என்னும் உயரிய சிந்தனைகளை மக்களிடையே உணர்த்த முனைந்ததோடு அறியாமை என்னும் இருளையகற்ற சுவாமி விவேகானந்தர் முனைந்து நின்றார்.

சுவாமி விவேகானந்தர் வாழ்ந்த காலம் இருள் சூழ்ந்த காலமாகும். அறியாமை என்னும் இருளில் மக்கள் தத்தளித்த காலமாகும். இனவெறியும், வகுப்புவாதமும், பிரிவினையும் மக்கள் சமுதாயத்தை அஞ்ஞான இருளில் மூழ்கடித்தது. இந்நிலையில் இந்துமக்கள் தத்தளித்தனர். இத்தகையதோர் சூழ்நிலையில்தான் சுவாமி விவேகானந்தர் "எழுமின் விழிமின்" என்ற போதனைகள் வாயிலாக விழித்தெழச் செய்தார்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பன்னெடுங் காலமாக நிலவிவந்த இந்துப் பராம்பரியமும், ஆன்மீகச் சிறப்பும் மறைப்புக்குள்ளாகியது. உலக மக்களிடையே பன்னெடுங் காலமாக சகிப்புத் தன்மையோ, சகோதர மனப்பான்மையோ உண்டாகவில்லை. சமய நம்பிக்கைகளும், ஒருமைப்பாடும் மக்களை நன்னிலைக்கு உயர்த்தும் என்பதை நன்குணர்ந்த சுவாமி விவேகானந்தருக்குப் பேருதவியாக அமைந்தது 1893ல் சிக்காக்கோவில் இடம்பெற்ற சர்வமத மகாநாடாகும். இம்மகாநாட்டிலே இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு மதங்களின் ஒற்றுமை பற்றியும், உலக சகோதரத்துவம் பற்றியும், இந்துமதத்தின் சிறப்பினையும் தெளிவுபடுத்தினார். பரஸ்பர நல்லுறவை மக்களிடையே வளர்ப்போம், எல்லோரும் புரிந்துணர்வுடன் உலக சகோதரத்துவத்தை ஏற்படுத்துவோம். சமரச சன்மார்க்க நெறியினைப் பின்பற்றி ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவோம் என்று விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி எழுமின் விழிமின் என்று அனைவரையும் ஒன்றிணைக்க முனைந்தவர் விவேகானந்தர் ஆவார். விவேகானந்தர் அவர்களது

போதனைகளால் கவரப்பட்டு ஆங்கிலமாது செல்வி நிவேதிதா போன்றவர்கள் மக்கள் சமுதாயத்திற்குப் பணியாற்ற முன்வந்தது சுவாமி விவேகானந்தரது சிந்தனைத் தூண்டுதலாலேயாகும்.

சுவாமி விவேகானந்தர் எழுமின் விழிமின் என்ற உயர் குறிக்கோளை முன்வைத்து ஆன்மீக வாழ்க்கைக்கு வழிப்படுத்தியமை அன்னாரவர்களது பணிக்கு தக்க எடுத்துக் காட்டாகும். மறுவுலக வாழ்க்கைக்குச் சமய ஞானம் வேண்டியதாகும். எனவேதான் சுவாமி விவேகானந்தர் ஆத்மீகபலம். பொருந்திய இந்தியாவைக் கட்டியெழுப்ப முனைந்தார். வேதாந்த உண்மைகளையும், அத்வைத மார்க்கத்தினையும் மக்களிடையே பரப்ப முனைந்தார். ஞான மார்க்கத்தின் சிறப்பினை மக்களுக்குணர்த்தியதோடு அதன் வாயிலாக ஆன்மீக விடுதலைக்கு வழிப்படுத்தியமை சுவாமி விவேகானந்தரது பெரும் பணியாக அமைகின்றது எனக் கொள்ளமுடியும்.

''எழுமின் விழிமின் குறிக்கோளை அடையும் வரை பணி செய்மின்'' என்ற கருத்துள்ள இலட்சியத்தை குறிக்கோளாகக் கொண்ட சுவாமி விவேகானந்தரது பங்களிப்பு இக்காலச் சீர்திருத்த நெறியாளர்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது என்றால் மறுப்பதற்கில்லை. தமது உயரிய போதனைகளால் மக்கள் சமுதாயம் உய்யும் நெறிகாட்டிய உத்தமராக விளங்கியவர் சுவாமி விவேகானந்தராவர். அன்னாரவர்களது எழுமின் விழிமின் என்ற தாரக மந்திரம் உலக மக்கள் யாவராலும் பின்பற்றக் கூடிய உயர்ந்த போதனையாகும்.

மனித குலம் உய்யும் நெறி காட்டிய உத்தமர் சுவாமி விவேகானந்தராவர். மக்கள் சமூகத்திற்குச் சேவையாற்றுவதே தமது தலையாய கடனெனக் கொண்டு தமது வாழ்நாளை அர்ப்பணித்துப் பணிபுரிந்தவர் சுவாமி விவேகானந்தர். ''செய் அல்லது செத்துமடி'' என்ற உயரிய வாக்குக்கேற்ப அன்னாரவர்கள் தொண்டுகள் பல புரிந்தார். அறியாமை என்னும் இருளிலும் ஏழ்மையிலும் வாழ்ந்த மக்களின் இன்னலைத் துடைத்தெறிய அவர் விழைந்து நின்றார். சுவாமி விவேகானந்தர் ஏழைகள்மீது அனுதாபங் கொண்டார். அவர்கள் துயர்துடைக்க அயராதுழைத்தார்.

''எழுமின் விழிமின் பணிசெய்மின்'' என்ற உயர்ந்த நோக்கிற்கிணங்க மனித குலத்தின் துயரினைத் துடைத்து விடிவுகாணப் புறப்பட்டவர் சுவாமி விவேகானந்தர். அன்னாரவர்கள் ஏழைகளின் உள்ளத்தில் இறைவனைக் கண்டார். துன்பப்பட்டவர்கள், பலவீனர்கள், இழிந்தோர்கள் யாவரும் தெய்வத்தின் வடிவங்கள் என்ற உயர்ந்த எண்ணங் கொண்டவர் சுவாமி விவேகானந்தர். ஏழைகளுக்காக எவனொருவன் இதயம் குருதி கசிகின்றதோ அவனே மகாத்மா என்று வணங்கத்தக்கவன் என்ற உள்ளங் கொண்டவராக சுவாமி விவேகானந்தர் விளங்கினார். இத்தகைய தூயசிந்தனையானது விவேகானந்தர் ஏழைகள் மீதும், மனித குலத்தின் மீதும் கொண்டிருந்த அன்புணர்வையும், மனித நேயத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது எனக் கொள்ளலாம்.

சுவாமி விவேகானந்தர் பக்தி, தூய்மை, சேவை மனப்பான்மை மனித வாழ்வின் இலட்சியமெனக் கொண்டு வாழ்ந்ததோடு, இவற்றை மனிதகுலத்துக்கும் எடுத்துரைத்தார். சுவாமி விவேகானந்தரது பணிகளுள் சமூக சமரச சன்மார்க்க நெறியினை வலியுறுத்தியமை பிரதானமானதாகும். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற தமது குருநாதரின் உபதேசங்களை உலக மாந்தர்க்குப் புகட்டும் வகையிலே விவேகானந்தரது செயற்பாடு அமைந்தது. இனப் பூசல்கள், மதப்பூசல்கள், பிரிவினைகள் தலை விரித்தாடிய வேளையிலே மனிதநேயத்துடன் சகோதர உணர்வை தமது போதனைகளால் எடுத்துரைத்தவர் விவேகானந்தர். எழுமின், விழிமின் என்று மக்கள் சமூகத்தை அழைத்து அறியாமை என்னும் இருளை அகற்றி அறிவொளி புகட்டி சமூக சமரச நெறியினை மக்கள் உள்ளத்தே விதைத்து மீட்சி பெற வைத்தவர் சுவாமி விவேகானந்தர் ஆவார்.

மனித குலத்தின் உயர்ச்சிக்கும், மீட்சிக்கும் அளப்பரிய பணிபுரிந்தவர் விவேகானந்தர் ஆவார். மனித குலத்துக்கு ஆற்றும் பணிகள் இறைபணியெனக் கொண்டு எழுமின் விழிமின் என்று மனித உள்ளங்களைத் தட்டியெழுப்பியவர் சுவாமி விவேகானந்தர். இந்தியத் திருநாடு குடிசையில்தான் வாழ்கின்றது. நாம் உலகுக்கு மாபெருஞ் செயல்களை ஆற்றவேண்டியுள்ளது என்று விழிப்புணர்ச்சியையேற்படுத்தி பணிசெய்ய ஊக்குவித்தவர் விவேகானந்தர். நல்ல காரியங்கள் சுயநலமில்லாமல் செய்யப்படுமானால் செய்பவரை அவை கடவுளிடம் அழைத்துச் செல்லும். பயன் கருதாமல் நற்செயல்களைச் செய்து கொண்டே இருந்தால் இறைவனிடம் ஆழ்ந்த பக்தி உண்டாகிறது. உலக நன்மைக்காகச் செய்யும் காரியங்களை பயன்கருதாமல் செய்யும் போது மனம் தூய்மையடைகின்றது. பயன் கருதாமல் பணிபுரிபவன் உண்மையில் தனக்கே நன்மை தேடிக் கொள்கிறான் என்ற தமது குருவின் உபதேசங்களை மனித குலத்துக்கு எடுத்துரைத்து மக்கள் தொண்டாற்ற வழிப்படுத்தியவர் சுவாமி விவேகானந்தராவர்.

சுவாமி விவேகானந்தரது போதனைகள் மனித குலத்தின் விடிவுக்கு ஒளிவிளக்காயமைந்தது எனலாம். எழுமின் விழிமின் பணிசெய்மின் என்று ஒவ்வொருவரது இதயக் கதவினையும் திறக்க வழிகாட்டியவர் விவேகானந்தர். தூங்கிக் கிடந்த உள்ளங்களை சேவை செய்ய ஊக்குவித்தார். சமூகத் தொண்டே மனித குலத்துக்குச் செய்யும் பெரும் பணி என்று தாமே செயல்வீரராக நின்று பணி புரிந்ததோடு மக்களையும் ஊக்குவித்தார். மக்களை நோக்கி அன்னாரவர்கள் பணிசெய்யுமாறு அழைத்தார். மாபெருஞ் செயல்களை நாம் நிறைவேற்ற வேண்டியுள்ளது. அதற்கு உற்சாகம் அவசியம் என்று எடுத்துரைத்தார். உற்சாகம் என்ற நெருப்பு அணையாமல் இருக்கட்டும். மாபெரும் பணிகளை மக்களுக்காக ஆற்ற இவ்வுற்சாகம் அவசியம், எனக் கூறி தூங்கிக் கிடந்த

உள்ளங்களைத் தட்டியெழுப்பி சேவையாற்ற வழிகாட்டியவர் சுவாமி விவேகானந்தராவர். மக்கள் பணியே பெரிதென மதித்து மனித குலத்துக்கு சேவையாற்ற முன்வந்தவர் சுவாமி விவேகானந்தர் ஆவார். அன்னாரவர்களது முயற்சியின் விளைவாக உருவாக்கப்பட்டதே இராமகிருஷ்ணமடம் ஆகும். இந்தியாவிலே வேலூர் என்னும் இடத்திலே தலைமையகத்தைக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட இராமகிருஷ்ணமிசன் இன்று இலங்கை, மறறும், ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பரந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இம்மடங்கள் வாயிலாக சுவாமி விவேகானந்தரின் எழுமின் விழிமின் என்ற உயர்ந்த குறிக்கோள் வாயிலாக இந்து மதத்திற்கும், உலக சகோதரத்துக்கும் மனித குல மேம்பாட்டுக்கும் அளப்பரிய பணிகள் ஆற்றி வருவது சிறப்புக்குரியதாகும்.

எழுமின் விழிமின் பணிசெய்யின் என்பதற்கிணங்க இராமகிருஷ்ண மடங்கள் சமயப் பணி, சமூகப்பணி, கல்விப்பணி என்று எத்தனையோ பணிகளை ஆற்றிவருவது சுவாமி விவேகானந்தரது உபகரிப்பினாலேயாகும். சிறப்பாக இலங்கையிலும் இராமகிருஷ்ணர் பெயராலும் விவேகானந்தர் பெயராலும் பாடசாலைகள் கல்லூரிகள், கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அனுராதபுரம் போன்ற இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளமையும், கொழும்பிலே இராமகிருஷ்ணமடம் பெரு அமைப்பாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும். இம்மடங்கள் வாயிலாக சுவாமி விவேகானந்தரது எழுமின் விழிமின் என்ற குறிக்கோள் நிறைவேற்றப்பட்டுவருவது சிறப்புக்குரியதாகும். சுவாமி விவேகானந்தரது முயற்சியின் விளைவாக உருவாக்கப்பட்ட மடங்கள் துறவியர்கள் பலரை உருவாக்கியமை சுவாமி விவேகானந்தரது பங்களிப்பினாலேயாகும். சுவாமி பிரேமாத்மானந்தர், சுவாமி ஜீவானந்தர் என்போர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

சுவாமி விவேகானந்தர் மனித குலத்தின் உயர்ச்சிக்காக எழுமின் விழிமின் என்ற உயர்ந்த குறிக்கோளை முன்வைத்து மக்களிடையே நிலவிய சாதியேற்றத் தாழ்வுகள், மூடநம்பிக்கைகள் என்பவற்றைக் களைந்ததோடு வறுமை, அறியாமை என்பவற்றை அகற்றி சமூகத் தொண்டுகள் புரிந்து மனித குல உயர்ச்சிக்குப் பணியாற்றியமை அவரது உயர்ந்த இலட்சியத்திற்கு எடுத்துக் காட்டாகும். சுவாமி விவேகானந்தர் உலகமக்களை விழித்து "எழுமின் விழிமின்" என அவர்களது கண்களைத் திறந்து மக்கள் பணி ஆற்ற அழைத்ததோடு தாமாக முன்னின்று சேவை மனப்பான்மையுடன் பணியாற்றியமை அவரது பரோபகார சிந்தனையை எடுத்துக் காட்டுகின்றது. அநாதைகளுக்கு, ஆதரவு அற்றவர்களுக்கு பணிகள் செய்தமையோடு, கல்லூரிகள் பலவற்றை அமைத்து பணிகள் ஆற்றவும் முன்வந்தவர் விவேகானந்தர் ஆவார். அவற்றோடு மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த இந்து மதத்தின் சிறப்பினை பிரசாரம் செய்தமையும் அன்னாரது பணிக்கு எடுத்துக் காட்டாகும். இந்துமதம், மனித வாழ்வின் சகிப்புத்தன்மை, நம்முன் உள்ள பணிகள் என அவராற்றிய உரைகள் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின எனலாம்.

இந்து மதத்தின் சிறப்பினை உலகில் பரப்பியதோடு, மனிதகுல மேம்பாட்டுக்கு அளப்பரிய தொண்டுகள் பலபுரிந்த சுவாமி விவேகானந்தர் அவர்களது இலங்கை விஜயம் உலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். சுவாமி உலகமெல்லாம் இந்து மதத்தின் சிறப்பினை உணர்த்திய பின்னர் 1897ம் ஆண்டு தைத்திங்கள் பதினைந்தாம் நாள் இப்புண்ணிய பூமியாகிய இலங்கை மண்ணிலே காலடி பதித்தார். இந்நன்னாள் தெய்வீகத் திருநாள். சுவாமி விவேகானந்தருக்கு சென்ற இடமெல்லாம் வரவேற்பு, அன்னாரது திருப்பாதங்கள் பதிந்த இடமெங்கும் புனிதமானது. இந்து மதத்தின் சிறப்பினைப்பற்றி இங்கும் எடுத்துரைத்தார். சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜயத்தால் நாடு தெய்வீக நிலைக்கு உயர்ந்தது. சுவாமி அவர்கள் வருகை தந்து நூற்றாண்டுகள் நிறைவு பெறும் இந்நன்னாள் இக்காலக்கட்டத்தில் கொண்டாடப்படுவது சுவாமி அவர்களது சிறப்புக்கு மணி மகுடமாகும். அன்னாரது நாமம் என்றும் நினைவு கூரத்தக்கதே என்றால் மிகையாகாது.

இந்துமத வளர்ச்சிக்கும், மனிதகுல உயர்ச்சிக்கும் அளப்பரிய தொண்டுகள் ஆற்றிய சுவாமி விவேகானந்தரது பணிகள் காலமுள்ளளவும் உலக மக்களால் நினைவு கூரத்தக்கதாகும். அன்னாரவர்களது கனவுகளை நனவாக்கவும், அவரது பணிகளை முன்னேடுத்துச் செல்லவும் இராமகிருஷ்ண மடங்கள் தொண்டாற்றி வருவது சிறப்புமிக்கதாகும். சுவாமி விவேகானந்தர் பணிகளை நினைவு கூர்ந்து அன்னாரவர்களது பெயரில் விவேகானந்த சபை நிறுவப்பட்டு பல சமூகப் பணிகளை ஆற்றிவருவதும், சுவாமி விவேகானந்தரது இலங்கை வருகை நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலை திரைநீக்கம் செய்யப்பட்டமையும் அன்னாரவர்களது பெரும் சிறப்பினை மட்டுமன்றி, இந்து உலகம் அன்னாரவர்கள் மீது கொண்டுள்ள பற்றுதலையும் பறைசாற்றி நிற்கின்றதெனலாம்.

எனவே இந்துமத வளர்ச்சிக்கும் மனித குல மேம்பாட்டுக்கும் தொண்டாற்றிய சுவாமி விவேகானந்தரது கனவை நனவாக்க "எழுமின் விழிமின்" என்ற குறிக்கோளுக்கமைய உலகமக்களுக்கு பணியாற்றுவோம், உலகில் பிரிவினைகள், மதப்பூசல்கள் அற்ற சமுதாயத்தைப் படைப்போம், மனித நேயத்தையும் சகோதர மனப்பான்மையையும் வளர்ப்போம் என திடசங்கற்பம் செய்வோம். இக்கனவு நிறைவேற சுவாமி விவேகானந்தரது பாதம் பணிவதோடு, அன்னாரவர்களது நூற்றாண்டு இலங்கை வருகை நன்னாளில் அன்னாரது நாமத்தைப் போற்றி நினைவு கூர்வோம். வாழ்க சுவாமிகள் நாமம்.

# FROM KAILÃSA TO KATARAGAMA:
## SACRED GEOGRAPHY IN THE CULT OF SKANDA-MURUKAN

**Why do you search for the Lover**
**Who has taken his abode in your heart?**
**He is the light of Katirkãmam!**
**-Nallúr Yogaswami**

In most world religions, pilgrimage is given relatively low status in the hierarchy of religious practices[2] But in one ancient yet still vibrant Sri Lankan tradition, the practice of *Pãdã yãtrã* or foot pilgrimage demonstrably embodies profound metaphysical truths while serving as a working framework or matrix for the exploration of progressively subtler levels of religious practice that have long escaped the attention of non-participant observers. Far from being a merely outward practice suitable only for laity or the exceptionally naive religious specialist, pilgrimage in the Kataragama *Pãdã Yãtrã* tradition is a comprehensive exercise of body, mind and spirit having ramifications far exceeding the suppositions of 20th century indological scholarship.

Despite its great antiquity, stature and symbolic importance in Sri Lanka's multi-ethnic society, the tradition of annual Kataragama *Pãdã Yãtrã* has never been the object of modern scholarly study. This is partly because it takes place in remote districts in the North and East - precisely the districts most affected by the ongoing conflict between insurgents and Government security forces-and partly because *pãdã yãtrã* survives as a rural village 'little tradition", beneath the purview of older scholarship. Studies of kataragama to date have tended to underplay the religious dimension of kataragama as the tradition's custodians themselves understand it, focusing instead upon emerging social trends and regarding the Kataragama festival less as a religious tradition than as a release-value for social tensions in post-Independence Sri Lanka.[3] This study, however, surveys Sri Lanka's longest and perhaps oldest pilgrimage tradition from the religious perspective as articulated by the tradition's practitioners themselves and assumes that a religious tradition is best understood within its own frame of reference.

Among the ancient living traditionsl that survive in island Sri Lanka's rich cultural environment, few are as well-known or as poorly - understood as that of the Kataragama Pãdã Yãtrã. Starting from the island's far north and ending up to two months and several hundred kilometres later at the Kataragama shrine in the island's remote southeastern jungle, the Kataragama Pãdã Yãtrã tradition has played a major role in propagating and perpetuating traditions of Kataragama through out Sri Lanka and South India. Predating the arrival of all four of Sri Lanka's major religions, it is essentially a tradition inherited from the island's indigenous forest - dwellers, the *Wanniya - laeto* or Veddas, as the Kataragama shrine's sinhalese *kapurãla* priest - custodians themselves readily concede.

Prior to 1950 when a motorable road was extended up to Kataragama from Tissamaharama, the only way pilgrims could reach Kataragama was on foot or by bullock cart. All that has changed since then, now Kataragama is cheaply and easily reachable by regular bus service directly from Colombo and other districts including the Eastern Province where the *Pãdã yãtrã* tradition nervertheless continues to flourish in an air of revival. Easy access has entailed a drastic change in the makeup of the pilgrims who flock to Kataragama for the *Asala* (July - August) festival season; while a few thousand still walk through Yala National Park to the east of Kataragama, now hundreds of thousands of Sri Lankan visitors come as pilgrims and even as casual tourists. This has inevitably eroded the consensus among pilgrims which gave Kataragama its air of sanctity and mystery, replacing it with a carnival - like atmosphere. And while the more devout pilgrims may regret the process of progressive secularization that continues to affect Kataragama, they also tend to explain these

changes in *emic* terms as being the will of the Kataragama god who, after so many centuries, remains alive and mysterious as ever in his ways of relating to humanity.

Because of the sheer length of the Kataragama Pãdã Yãtrã, since ancient times those who walk the distance (much of it through uninhabited jungle even today) have tended to be dedicated religious specialists. The great majority of Pãdã Yãtrã swãmis and bãwãs remain anonymous, but among them have been more than a few great saints, sages and *siddhas* beginning, it is said, with Skanda - Murukan̲ himself who is the first among *pãda yãtrã* pilgrims according to the tradition. These have included, notably, the renowned fifteenth century Tamil psalmist Arunakiri, who composed at least one *Tiruppukal̲* hymn at Tirukkõnamalai (modern Trincomalee, a major sacred site on the traditional Kataragama Pãda Yãtrã route) and fourteen at *Katir-Kãmam.* '(the Place of) brilliance and passion', i.e. Kataragama.[4] More recent well-known pilgrims include Pãlkuti Bãwã and Yogaswami of Nallúr. The following account of Yogaswami's pilgrimage to Kataragama remains typical even today:

> Subsequently by about the middle of 1910, Swami left on a solitary sojourn by foot along the Island's coastal belt eastward, and met many ascetics on the way. He moved freely with certain Muslim Sufi saints, Buddhist monks, and Veddha chiefs. He communed with Murugan in Kathirkamam, the Holy of Holies skirted by the Manica Ganga... from 1910, he had taken solitary long distance pilgrimages to Tiruketheeswaram, and on to Wattapalai and Koneswaram at Trincomalee, and skirting the east coast by the foot path, he had spent his recluse days at Sittankudi, Batticaloa and Tirukkovil. Many a time, he had related incidents when he trekked the Vedda tracts of Moneragala and Bibile to reach the abode of Murugan at Kathirkamam, skirted by the Manica Ganga and the seven hills of Kathiramalai.[5]

Almost no records survive written in the pilgrims' own words, although British government agents made exhaustive records of the colonial government's efforts to discourage or restrict a practice considered to be unhealthy and unproductive.[6] The perspective of dedicated foot pilgrims, however, was and remains redically different from that of most scholars and government administrators.

This study is based on the researcher's participation in the *Pãdã Yãtrã* from Jaffna to Kataragama in 1972 and a further ten times since 1988. Especially invaluable has been detailed instruction from the renowned Swami Gauribala Giri, a German sannyãsin-disciple of Nallúr Yogaswami. After meeting Yogaswami in 1947, 'German Swami' (as he was best known throughout Ceylon) walked from Jaffna to Kataragama annually from 1948 to 1972 when this researcher as an undergraduate had the exceptional opportunity to join the Pãdã Yãtrã from Celvaccanniti Murukan̲kovil (Jaffna district) in his company. Although Swami Gauribãla never published the results of his life-long study of sacred geography, his observations inspired many and provided the basis for Paul Wirz's Kataragama die heiligste Staette Ceylons (1954), still the most comprehensive account of Kataragama's religious traditions.[7]

The present study may be regarded as a continuation of German Swami's 'Mu research' (as he termed it) applied to the theory and practice of Kataragama Pãda Yãtrã, of which German Swami was widely acknowledged as an accomplished expert. His distinctly antiquarian approach, developed through decades of field-work and patient study of diverse literary and oral traditions, informs the content and methological approach of the present study. German Swami deplored the approach of Western-trained researchers who insist on imposing modern values and assumptions upon oriental traditions whose *raison d'etre* lies entirely outside the scope of their research. In his view, the sincere researcher should seek to duplicate the findings of oriental traditions by replicating their methods whenever possible rather than to apply alien methods and assumptions. The present study therefore is derived from this researcher's efforts to duplicate the findings of German Swami and other practitioners before him.

The perilous passage through an Active Door or 'narrow gate' is' a common motif of folklore traditions worldwide and has been the subject of a vast literature, of which Ananda Coomaraswamy's essay "Symplegades" is arguably the best.[8] His description of the hero who undertakes the Grail Quest aptly describes the late German Swami Gauribãla:

The expert, for whom the antitheses are never absolute values but only the logical extremities of a divided form (for example, past and present of the eternal now), is not overcome by, but much rather transits their "north-and-southness" or, as we should say, "polarity," while the empiricist if crushed or devoured by the perilous alternatives (to be or not to be, etc.) that he cannot evade.[9]

The researcher's methodological approach therefore is both critical and problematic, for while most pilgrims will gladly speak about their experience of *Pãda Yãtrã*, only a very few pilgrims among hundreds are qualified to speak authoritatively about the essential inner pilgrimage. And since the interior pilgrims who have penetrated deeply will not or cannot express their experiences except by allusion and metaphor, the earnest researcher has to build a picture of the essential mystical practice based partly upon the example or testimony of others but based to a greater extent upon firsthand experience.

## SACRED GEOGRAPHY AND THE CULT OF SKANDA -MURUKA<u>N</u>

The Kataragama Pãda Yãtrã was Swami Gauribãla's practical introduction to cosmography or sacred geography as he called it, the systematic study of what Eliade termed hierophanies, those rare, divine spots at which divinity reveals itself on earth.[10] Island Lankã preserves a wealth of folklore said to originate from remote prehistory and puranic sources, including notably the Rãmãyana, which still survives in the form of local place legends. Swami Gauribala's approach involved analyzing the relationship between sacred places and their associated legends. Having re-searched and dis-covered the principles of traditional oriental cosmography, he concluded that they should remain sacred and secret, i.e. evident but unarticulated. His contention was that anyone qualified to study a sacred science who studies that science that science in depth would arrive at the same principles and, hence, similar conclusions. Decades later, his contention appears at least partly confirmed.

The cult of ***Muruka<u>n</u>*** (Tamil: 'tender or fragrant one') or ***Skanda*** (Sanskrit: 'leaper or attacker' from skand 'to leap or spurt'), like the god himself, has a complex, composite history. Western-trained scholars are quick to point out the composite nature of the god as an amalgam of two distinct yet structurally analogous deities, Dravidian and Sanskritic respectively. But among indigenous religious specialists and millions of devotees at large, there is no question that the diverse body of lore in Tamil, Sanskrit, Sinhala and other languages describes a single vigorous and complex deity familiar to both northern and southern traditions since antiquity.

## QUALITATIVE SPACE AND CHRONOLOGICAL TIME

Whereas Semitic and other nomadic peoples tend to think historically in terms of time and genealogy, people of long sedentary heritage and markedly cultic outlook think in terms of space, typically postulating a 'center of the world' in their own midst.' In South Asia, the geographical environment has played a major role in shaping Indian thought. India thinks in terms of qualitative or mythical space in which each place has not only its own outward characteristics but also its own significance for those beings who inhabit that space. Hence, in the traditional worldview of India, spatial differences are also qualitative differences. In qualitative places are space, not all equal and the directions of space also have non-spatial qualities, in contrast to purely mathematical Euclidean space in which all points and all directions are content-less. quality-less and equal. Of course, South Asia is no stranger to the concept of sacred time, either, since most of the calendar is sacrealized; even the modern Gregorian calendar remains sacralized to a certain extent. Yet nowhere else in the

world has the tradition of pilgrimage and sacred geography remained as pervasive and vibrant as in the Indian subcontinent.

## ARU PATAI VITU: THE SIX STATIONS OF SKANDA - MURUKAN

In the context of Tamil Nadu, sacred geography is invariably associated with the *aru patai vītu,* Murukan's 'camps' or sacred sites associated with particular episodes in His divine career that are scattered across the length and breadth of Tamil Nadu, effectively homologizing the landscape of Tamil Nadu with the career of Murukan. In fact, there are only five *patai vitu*; the number six should be understood not as a statistical tally but rather a significant number in numerology and sacred geometry, a sister science of sacred geography. The number six signifies, among other things, the six 'rays' of the three - dimensional cross, i.e. the six cardinal directions of space. This structural relation of the number six to three-di-mensional space is directly related to the genesis of Skanda from six rays of light that coalescs and integrate as the Sanatkumara or Perpetual Youth personified.

In this aspect as Sanmukha 'the Six- Faced,' Skanda-Murukan is the Lord of Space, the Unmoved Mover abiding as a conscious presence at the source and center of the matrix of infinite possibilities-- our own three-dimensional world of embodied existence. It is precisely this aspect of Skanda-Murukan that is celebrated at Kataragama, where no icon is worshipped but only a small casket containing (or said to contain, for it is never displayed) the *sadkona yantra* or six-pointed magical diagram etched upon a metal plate. Indeed, in contradistinction to the tradition of Tamil Nadu, in Sri Lanka the entire career of Skanda-Murukan is said to take place at Kataragama, such that the god's six stations or directions of space collapse, or rather return, back into their souurce-- undifferentiated singularity.

At Kataragama this principle also finds embodiment in the *ēlu Malai* or Seven Hills, where the highest (417 m.) and 'best' peak, Katira Malai ('Mountain of Light') or Vedahitikanda ('The Peak Where He Was'), is homologized to the number seven signifying reversal, return, integration and completion or perfection in childlike innocence and simplicity (Tamil: *Cumma iruttal*), which is the specific objective of Kaumara sãdhanã or praxis for aspirants in the tradition of Skanda-Murukan. This holographic quality of Kataragama, where the whole may be seen within any given part, permeates Kataragama, not only on the levels of myth and ritual but even on the physical level of geography. Mention may be made here that in ancient times when sacred geography played an important role in the identification of powerful sites, a configuration of seven hills was considered to be the ideal location for the capital of a kingdom, i.e. its seat of power. Notable examples include Athens, Rome, Constantinople and Jerusalem as well as Kataragama, the capital of a virtual kingdom.

## FROM KAILÃSA TO KATARAGAMA: THE MYTHICAL CAREER OF SKANDA-MURUGAN

In the cult of Kataragama Skanda, *pãda Yãtrã* has mythological significance. In most versions of the legend current in Sri Lanka, Skanda-Murukan originates as six rays emitted from his father Siva's third eye, which fall to earth where six water nymphs, the *Krttika* maidens (hence his name Karttikeya), discover him in a marshy lake (saravana) in the Himalayas, a birth motif familiar elsewhere in the birth of Moses and Osiris. In the puranic accounts considered authoritative among Hindus today, Karttikeya's childhood is spent upon on Mount Kailãsa, a real geographical place in the trans-Himãlaya which in the pan-Indian cosographical conception is regarded as the *stambha* or *axis mundi*, the center and axis of the cosmos.

Anticipating the momentous career that awaits Kãrttikeya in the southern continent of *Jambudvipa* (South Asia), the *devãrsi* or divine sage (and troublemaker) Nãrada instigates a contest between Kãrttikeya and his rotund elder brother the elephant-god Ganapati. With his parents' connivance, Ganapati falls back on his natural rat - like cunning to cheat Kãrttikeya and claim the prize. His sense of justice enflamed, Kãrttikeya leaves home to never return. He discards his

divine raiments and, with only a kaupine - loincloth and a staff, storms down from the Himālayas to the Gangetic plain of India and continues southward to South India. In the South Indian recension, the god's greatest exploits occur in Tamil Nadu. But in the Sri Lankan recension, he crosses by boat to island Lankā and proceeds on foot to *Katir - Kāmam* or Kataragama where he leads the army of the devas to victory over the *asura* - titans before the crowning event of his career -- his secretive courtship and marriage with Valli Amma, daughter of the local chieftain of the Veddas or *Wanniyala - aeto,* the indigenous forest inhabitants.

From the conventional standpoint, this union of high god and low - born earthly maiden is a gross mismatch. And yet, representing as it does the 'illicit union' of Spirit with the earth-bound soul, the legend of Kataragama has long served as a creative frame - work for the most diverse forms of mysticism imaginable -the very hallmark of Kataragama down the ages and the wellspring of its well - deserved reputation for mystery and sanctity.

## PADA YATRA AS PASSAGE INTO THE LABYRINTH

In traditions the world over, pilgrimage essentially refers to the passage or transformation of the soul that turns away from the periphary of the outward world of multiplicity and turns inward through progressively deeper levels of awareness to arrive at the sacred center. The sacred center is entirely within the contingent being's inherent range of 'infinite possibilities,' and as such it may also mainfest outwardly at certain times and certain places in the socially - conditioned world of sense perception. When the essential sacred center within is seen to have its counterpart in a sacred geographical site, the 'two' passages may be combined or integrated or, rather, comprehended to be inward and outward reflections of one and same sacred passage: the return from multiplicity to one's original nature at the center of the world. In *kaumāra sādhanā,* this passage is also understood as the return to one's orginal childlike nature of wonder and innocence, in Tamil called *cumma iruttal,* a multivalent expression meaning 'being still,' remaining simple,' or 'just being.'

In Kaumāra tradition, the God's active yet covert involvement is the vital or margical ingredient that transforms *pāda yātrā* from a mere walking journey into the experience of spiritual passage through a maze of subtle dimensions that escape the attention of non-participant observers. By the power of an underlying presence that none can claim to understand, earnest pilgrims traverse through the shadowy world of outward appearances and penetrate deep into an affulgent interior realm of *Katir-Kāmam* or 'light and delight.' For them the spiritual journey is not empty metaphor but intensely vivid and real. In this sense, only experienced pilgrims can appreciate what it means to cross invisible thresholds and plunge into strange realms of sacred space. Hence, the motif of the *labyrinth* or passage to the innermost sanctum finds application in spiritual traditions worldwide, particularly in the context of pilgrimage in the dual sense of outward journey and inward passage to one's metaphysical source or center.

Through a process of release from conventional notions of self, time, space and causation by 'coursing against the stream' of worldly opinion and habitual ideation, veterans of the tradition consciously aim to recover the *amrta* or *ma 'ul hayat,* the Water of Life that others are said to have found before them. In order to arrive at its source, they may enter dimensions where what was once thought impossible can come to pass in the twinkling of an eye. Despite hunger, thirst, fatigue, illness and a host of very real dangers one may encounter when traversing jungle and areas of civil conflict, most foot pilgrims reach their destination in the outward sense at least. But the longer and deeper passage to the sacred center within is beset with trials and obstacles of even greater diversity and subtlety (often depicted as walls of fire or water) which effectively screen out all but the most dedicated and resourceful pilgrims.

**(Will be continued in the next issue)**

# கவலை தீர்க்கும் கந்தன்

கவிஞர் ஊரெழு கதிரமலையான்

1. வேலைக் கண்டு உள்ளம் உருகி
வேண்டிக் கொள்ளும் அடியார்
காலை இறுக்கிக் கட்டிப் போட்டால்
கவலை தீர்க்கும் கந்தன்.

2. காலை மாலை இன்று நாளை
கவலை வேண்டாம் கதிராய்
கால வெள்ளங் கடந்து நிற்கும்
கருணை வள்ளல் கந்தன்.

3. சின்னன் பெரிது பின்னம் முழுமை
ஒன்றும் இல்லா வடிவாய்
தின்னக் குடிக்கச் சேரப் பழகக்
கன்னல் ஆகுங் கந்தன்.

4. கருணை வெள்ளங் கண்ணில் சொட்ட
உருளும் இயல்பு வடிவாய்
கறுத்த மேகம் பொழியும் மழையாய்
மறுக்கா தளிக்குங் கந்தன்.

5. கேட்கக் கேட்கக் கேள்விக் கப்பால்
கேட்டுக் கொடுக்கும் நட்பாய்
பாட்டுப்பாடி ஆடிக் கேட்டால்
பற்றிப் பழகுங் கந்தன்.

6. கறுத்தார் சிவத்தார் கொடுத்தார் எடுத்தார்
ஒறுத்தார் என்ப தில்லா
வெறுப்பும் விருப்பும் வேறு பாடும்
மறுப்பு மில்லாக் கந்தன்.

7. அன்புக் கன்பாய் அறிவுக் கறிவாய்
அருளை ஆளுந் திருவாய்
இன்ப வடிவாய் இனிக்கப் பேசித்
துன்பந் துடைக்குங் கந்தன்

8. பசுவின் மடியில் பாலாய் நிறைந்து
பரந்து மறையும் நெய்யாய்
பாலாய்த் தயிராய் மோராய்ப் பலவாய்
பசியைத் தீர்க்குங் கந்தன்

9. கொல்லா விரதக் கொடுமை செய்யா
நல்லார் வாயால் வெளியே
மெல்ல மெல்லச் சொல்லாய் வந்து
எல்லாந் தருவான் கந்தன்.

10. முத்தியின் வழியில் புத்தியை நாடுஞ்
சித்தரின் சித்தஞ் சிறக்க
சக்தியாய் நிற்குஞ் சற்குரு நாதன்
வித்தையின் வித்தே கந்தன்

(நன்றி: முருகானந்தம்)

# மனம்

சுகத்திற்கும் துக்கத்திற்கும் மனமே. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று பேதம் காட்டுவதும் மனமே. மனம் ஒரு நண்பன்; ஒருசத்துருவும் கூட. காமத்திற்கும், கோபத்திற்கும் காரணம் மனமே. காமத்தினதும், கோபத்தினதும் அழிவிற்குக் காரணம் மனமே. மனமே எல்லையற்ற சச்சிதானந்தத்திற்கும் அழைத்துச் செல்லும் சாதனம். மனம் தனது சங்கற்பத்தால் உலகத்திலிருக்கின்ற உயிருள்ள, உயிரற்ற சகல பொருட்களையும் உண்டுபண்ணுகிறது. அனைத்தையும் அழிப்பதுவும் மனமே. மனம் இல்லை என்றால் நாங்கள் இல்லை. நாங்கள் இல்லை என்றால் விருப்பங்களோ வெறுப்புக்களோ இல்லை. விருப்பங்களை நாங்கள் விட்டுவிட்டால் மனம்கடந்த மௌன நிலைக்கு இட்டுச் செல்லப்படுவோம். கட்டுப்படுத்தப்பட்ட மனம் சீரான வாழ்க்கைக்கு அவசியமாகிறது. புலன் இச்சைக்கு இடம்கொடுத்த மனம் விடுதலை அடைவது என்பது இயலாத காரியம். ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றி அலையும் மனதைக் கட்டுப்படுத்துபவன் எவனோ, அவனே ஆத்மீக வாழ்விற்கு உரியவன்.

**- சுவாமி கெங்காதரானந்தா**

# வாரியார் பேசுகிறார்...

வாரியார் பிறமொழி கலந்தும் சொல்லாட்சி புரிவார். அவர் ஒரு சமயம் கூறினார்.

"காபி பலகாரங்கள் சாப்பிடும் இடத்தை 'கிளப்' என்கிறோம். கிளப் என்றால் கூடுமிடம் என்று சொல்வார்கள். காப்பி பலகாரம் நன்றாக இருந்தால் அனைவரும் கூடுவதற்கு அது கிளப் ! ஒன்றும் வாயில் வைக்க முடியாவிட்டால் இடத்தை விட்டு கிளப்பு ! என்பதற்காகவும் அது 'கிளப் !'

இன்னொரு சமயம் இம்மாதிரி கலப்பு சொல்லை இன்னும் நயமாக வாரியார் சொன்னார்.

"நமது புராணங்களில் 'காமன்' என்று ஒரு தேவன் வருவான். இவன்தான் காதல் மன்னன். இவன் அருள் இருந்தால் தான் மானுடர்களுக்கு சிருங்கார உணர்வே தோன்றும். இவனுக்கு 'காமன்' என்று ஏன் பெயர் வைத்தார்கள் தெரியுமா? இவன் மதங்களை எல்லாம் கடந்து எல்லா நாட்டவருக்கும் பொது காதல் தேவனாய் விளங்குகிறான். இவன் எல்லாருக்கும் 'பொது' என்பதைக் குறிப்பிடத்தான் 'காமன்' என்கிறார்கள்."

★ ★ ★

வாரியாரின் சொல்லாட்சிக்கு இன்னொரு உதாரணம். "அந்தக் காலத்தில் 'அருந் தபசி'கள் வாழ்ந்தார்கள்.... ஆனால் இந்தக் காலத்தில் அருந்த 'பசி' என்று அலைபவர்களே சாமியார்களாக வாழ்கிறார்கள்.

★ ★ ★

### முட்செடி

இவ்வுலகம் ஒரு முட்செடி போன்றது. முட்செடியின் முள்ளில் மாட்டிக் கொண்டுள்ள துணியின் ஒரு பகுதியை விடுவிப்பதற்குள் மற்றொரு பகுதி அதில் மாட்டிக் கொள்கிறது. உலகமென்னும் முட்செடியில் அகப்பட்டுக் கொள்கிறவர்களின் கதியும் அப்படியே.

★ ★ ★

### தவம் மூன்று

உலகத்தில் உள்ள பகைவரைக் கெடுத்து தான் மட்டும் வாழ வேண்டும் என்று செய்கிற தவம் அசுரதவம்.

தான் வாழ வேண்டும் என்று செய்வது மனித தவம்.

சராசரங்கள் எல்லாம் வாழ வேண்டும் என்று செய்கின்ற தவம் தெய்வத் தவம்.

★ ★ ★

### ஆற்றல் பெற

கிளிபோல இனிமையாகப் பேசு.
கொக்குபோல ஒருமையுடன் இறைவனை நினை.
ஆடுபோல் நன்கு மென்று உண்.
யானைபோல் குளிப்பாயாக.
நாயைப்போல் நன்றியுணர்ந்து ஒழுகு.
காக்கையைப்போல் குறிப்பறிந்து கொள்.
தேனீயைப் போல உழை.
எறும்பைப் போல சுறுசுறுப்பாயிரு.
ஆரோக்கியம் பெறவேண்டி ஆதித்தனை வணங்கு.
செல்வம் பெற வேண்டி அக்கினியை வணங்கு.
ஞானம் பெற வேண்டி முருகனை வணங்கு
ஆற்றல் பெறவேண்டி அம்பிகையை வணங்கு.
சுகம் பெற வேண்டி திருமாலை வணங்கு.

★ ★ ★

"மூட்டைப் பூச்சியைப் போல் பிறரைத் துன்புறுத்தி வாழக்கூடாது. எலியைப் போலத் திருடி வயிறு வளர்க்கக் கூடாது. கறையான்களைப் போல் பிறர்பொருளை நாசப்படுத்தி வாழக்கூடாது. தேனீயைப் போலவும் எறும்பைப் போலவும் உழைத்து உண்ணுவதே அமைதியான வாழ்க்கையாகும்.

★ ★ ★

'வீதிகளில் தொங்கும் அஞ்சல் பெட்டியில் போட்ட கடிதங்கள் அஞ்சலகத்துக்குச் சென்று சேரும். ஆனால் தலைமை அஞ்சலகத்தில் போட்ட கடிதங்கள் தெருவில் உள்ள அஞ்சல் பெட்டிகளுக்கு வராது. அதுபோல அடியார்க்குச் செய்த தொண்டு இறைவனைச் சென்று சேரும்.

★ ★ ★

புகைபிடிப்பதற்கும் ஒழுங்கீனமான பேச்சுகள் பேசவும் வெட்கப்பட வேண்டுமே தவிர, விபூதி பூசவும் தெய்வ வழிபாடு செய்யவுமா வெட்கப்படுவது.

★ ★ ★

முற்காலத்தில் வழிப்போக்கர்கள், ஏழைகள் தங்குவதற்காக வீட்டிற்கு முன் திண்ணை கட்டினார்கள். இப்போது உள்ளவர்கள் வீட்டிற்கு முன் நாயைக் கட்டுகிறார்கள்.

★ ★ ★

### திசைகள்

கிழக்கு நோக்கி உண்பார்க்கு ஆயுள் வளரும் !
மேற்கு நோக்கி உண்பார்க்கு பொருள் சேரும்.
தெற்கு நோக்கி உண்பார்க்கு புகழ் சேரும்.
வடக்கு நோக்கி உண்பார்க்கு நோய் வளரும்.

★ ★ ★

### பூஜை

நினைக்கும் தன்மையுடையவன் மனிதன். நினைவை வெளிப்படுத்தும் கருவி வாய். உணவை அருந்துகின்ற வாய்க்குப் பெருமை கிடையாது. வாயிருந்தும் விலங்குகளை வாயில்லாப் பிராணிகள் என்று கூறுகின்றோம். கருத்துக்களை வெளிப்படுத்தி வசனிக்கும்வாயை உடையவன் மனிதன்.

இந்த உடம்பையும் வாக்கையும் நமக்குத் தந்தவன் இறைவன். நினைக்க நெஞ்சையும், உரையாட வாயையும் தாங்கி நின்று தொழிற்படுகின்ற உடம்பையும்தந்த இறைவனை நாம் நன்றி

மறவாமையின் பொருட்டு பூவும் நீரும் கொண்டு பூஜை செய்ய வேண்டும்.

★ ★ ★

### இல்லாள்

இல்லாள் – இல்லத்தை ஆள்பவள். பெண் பாலாகத்தான் குறிப்பிடுகிறோம். அதையே ஆண் பாலாகச் சொல்ல முடியுமா? அப்படிச் சொன்னல் 'இல்லான்'–'பாப்பா' ஆகிவிடும். ஆகவே தான் பிச்சைக்காரன் கூட அய்யா பிச்சை என்று சொல்ல மாட்டான்; அம்மா பிச்சை என்றுதான் சொல்லுவான். அந்தப் பிச்சைக்காரனுக்குக்கூட தெரியும். அய்யா பேரில் வீடு மனை இருக்காது என்று; எல்லாமே அம்மா பேரில்தான் இருக்கும். ஆகவே இல்லாள் உயர்ந்தவள் ஆகிறாள்.

★ ★ ★

### படுக்கும் முறை

ஆடவர் இடப்பக்கமாகவும்–பெண்டிர் வலப்பக்கமாகவும் படுத்துறங்க ண்டும். அதனால் ஆயுள் வளர்வதுடன் நன்கு ஜீரணமாகும். வடக்கே தலை வைத்துப் படுக்கக் கூடாது.

★ ★ ★

### நன்றி

நரம்புள்ள பகுதிகள் சுளுக்கிக் கொள்கின்றன. நாவில் நரம்பு ஆண்டவன் வைத்திருந்தால் ஒரு நாளுக்கு நூறு தடவையாவது சுளுக்கிக் கொள்ளும். விளக்கெண்ணெய் தடவி உருவ வேண்டிவரும். இடையறாது பேசுகின்ற நாவை நரம்பின்றி படைத்துக் கொடுத்தான். அவன் கொடுத்த நாவினால் அவனுடைய நாமங்களைச் சொல்லுதல் நன்றி பாராட்டுதலாகும்.

★ ★ ★

### பிறவி தரும் வித்து

வித்துக்களெல்லாம் காலம் தவறி விதைத்தால் முளைக்காது. முளைத்தாலும் பயன்தராது. ஆசை எனும் வித்தானது எந்தக் காலத்தில் எந்தச் சமயத்தில் போட்டாலும் முளைத்துவிடும். மறுபிறவியைக் கொடுத்து விடும்.

★ ★ ★

### ஒளி விளக்கு

ஒளியினால் நமக்கு பெரிய இன்பம் உண்டாகிறது. உலகில் ஒளியைத் தருகின்ற பொருட்கள் கதிரவன், திங்கள், விளக்கு என்ற மூன்றினால் நாம் நன்மையடைகிறோம். கதிரவனும், சந்திரனும் நமக்கு வேண்டும் போது, வேண்டிய இடங்களில் உதவுவதில்லை. விளக்கை நமக்கு வேண்டும்போது, வேண்டிய இடத்தில் பயன்படுத்தலாம். நமக்கு அண்மையில் உதவுகின்றது. அதனால் இறைவனை ஒளிவிளக்கு என்று அழைக்கிறோம்.

★ ★ ★

### தண்டனை

முற் பிறப்பில் எந்தெந்த உறுப்புகள் குற்றஞ் செய்தனவோ, அந்தந்த உறுப்புகள் துன்பத்தையடையும்.

திருக்கோயிலிலே தெய்வ வழிபாடு செய்கின்ற கணவனுடன் வந்து வழிபடுகின்ற ஓரழகிய பெண்மணியைக் கடைக்கண்ணால் உற்று உற்று நோக்கியவனுக்கு மறுபிறப்பில் மாறுகண் உண்டாகும்.

பிறர் பேசும் இரகசியத்தை உற்றுக் கேட்டவன் மறுபிறப்பில் செவிடனாகப் பிறப்பான்.

நண்டின் பத்துக் கால்களை முறித்துச் சமைத்து தின்றவன் மறுபிறப்பில் பத்து விரல்களும் அழுகத் தொழு நோயினால் துன்புறுவான்.

சதா புறங்கூறுகின்றவன் மறுபிறப்பில் ஊமையாகப் பிறப்பான்.

ஏழையை ஓங்கியடித்தவன், மறுபிறப்பில் கையொடிந்து முடவனாவான்.

ஞானிகளைப் பழித்தவன் மறுபிறப்பில் பித்தனாய் பிறப்பான்.

★ ★ ★

### நல்ல நாள்

பங்குனி உத்திரம் மிகவும் நல்ல நாள். இந்நாளில் எந்த ஒரு சுபகாரியங்களையும் செய்யலாம். பார்வதிக்கும் சிவனுக்கும் திருமணம் நடந்தது இந்த பங்குனி உத்திரத்தில்தான். ராமருக்கும் சீதைக்கும் திருமணம் நடந்ததும் பங்குனி உத்திரத்தில் தான். அர்ச்சுனன் அவதரித்ததும் பங்குனி உத்திரத்தில் தான். பழனிமுருகன் தேரோட்டமும் பங்குனி உத்திரத்தில்தான்.

★ ★ ★

### அறம்

மானிடராகப் பிறந்த நாம் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றினாலும் அறம் புரிய வேண்டும். மனத்தால் செய்யும் அறம் கடவுள் உணர்வும் நற்சிந்தனையும் ஆகும்.

மொழியால் அறம் ஆண்டவன் திருநாமம் ஓதி புகழ் பாடுதலும் பிறருக்குத் துன்பம் பயிலாத மொழிகளைக் கூறுதலுமாம். உடலால் செய்யும் அறம் பதியை மலர் கொண்டு பரவுதல், அடியார்க்கு தொண்டு பூணுதல், பிற உயிர்கட்கு நன்மை செய்வதுமாம்.

★ ★ ★

### பண்பு

இதயத்திலிருந்து பிறக்கும் அன்பே, பண்பு. மூளையிலிருந்து தோன்றும் கூட்டுறவே அறிவு. அறிவைவிடப் பண்பே உலகுக்குத் தேவை.

★ ★ ★

### கடவுள் காப்பார்

'அரசன் ஒழிக' என்ற கைதிகளுக்கு உணவு கொடுத்து அரசன் காப்பாற்றுகிறான்.

அது போலவே 'கடவுள் இல்லை' என்று நாத்திகம் பேசுபவனையும் கடவுள் காப்பாற்றுகிறார்.

★ ★ ★

### 'கள்' செய்யும் பணி

கள்ளைக் குடித்தால்தான் போதை தரும் என்பது இல்லை. கள் என்று சொன்னாலே போதும். பலர் மயங்கி விடுகிறார்கள். ஒருவரை 'நீ' என்று சொல்வதற்குப் பதில் 'நீங்கள்' என்று சொன்னால் அவர்கள் எளிதில் மயங்கி விடுவார்கள். எல்லாம் அந்த 'கள்' செய்யும் வேலைதான்.

★ ★ ★

### யாரை அழைப்பேன்

ராமபிரான் ஒரு முறை கங்கையில் குளிக்கச் செல்லும்போது தன் தோளில் இருந்த அம்புராத் தூளியைக் கழற்றி வைத்தார். அதில் ஒரே ஓர் அம்பு மட்டுமே இருந்தது. அதைப் படுக்க வைத்து செல்லுதல் வீரனுக்கு அழகானது அல்ல எனத் தரையில் குத்திவிட்டு சென்றார்.

குளித்து முடித்துவிட்டுத் திரும்ப அந்த அம்பைத் தரையிலிருந்து பிடுங்கிய போது ஒரு தவளை ரத்தம் வெளியேற உயிருக்குத் துடிதுடித்துக் கொண்டு அதன் நுனியில் ஒட்டியிருந்தது! அதைக் கண்ட ராமபிரான் நெஞ்சம் பதைபதைத்துத் "தவளையே, நான் உன்னை அம்பால் குத்தியபோது நீ குரல் கொடுத்திருக்கலாமே? ஐயோ பெரும் தவறு செய்து விட்டேனே" எனக் கலங்கினார்.

தவளை கூறியது "எம்பெருமானே ! எனக்குப் பிறர் தீமை செய்தால் என்னைக் காப்பாற்றிக் கொள்ள உன்னை ராமா என அழைப்பேன். ஆனால் அந்த ராமனே இப்போது எனக்குத் தீங்கு செய்யும்போது நான் வேறு யாரைக்கூவி அழைப்பேன்?"

★ ★ ★

காதிலே வைரத்தோடு இருக்கலாம். ஆனால் நெஞ்சிலே வைரத்தோடு இருக்கக் கூடாது.

★ ★ ★

### வாரியார் அடித்த சுண்ணாம்பு

திருமுருக கிருபானந்த வாரியார் வெளியூரில் முகாமிட்டிருந்த சமயம் அது. ஒரு நாள் காலை அவர் தம் நெற்றியில் திருநீறு அணிந்து கொண்டிருந்தார். அதைக் கவனித்துக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் கைகொட்டி "சாமியார் நெற்றிக்குச் சுண்ணாம்பு அடிக்கிறார்டோய்" என்றான் தன் சகாக்களிடம் கேலியாக.

வாரியார் அவனைக் கூப்பிட்டுத் தம் அருகில் நிறுத்திக் கொண்டு, "எந்த வீட்டுக்குச் சுண்ணாம்பு அடிப்பார்கள்? குடியிருக்கும் வீட்டுக்கா, குட்டிச்சுவருக்கா?" என்று கேட்டார்..

"குடியிருக்கும் வீட்டுக்குத்தான் !" என்றான் சிறுவன். "நான் என்னைக் கடவுள் குடியிருக்கும் வீடாக நினைக்கிறேன்: அதனால் சுண்ணாம்பு அடிக்கிறேன். நீ உன்னை கடவுள் குடியிருக்கும் வீடாக நினைக்கிறாயா? இல்லை, கழுதை குடியிருக்கும் குட்டிச் சுவராக நினைக்கிறாயா?"

ஒரு கணம் யோசித்த சிறுவன், "நான் ஏன் என்னைக் குட்டிச்சுவராக நினைக்கணும்? குடியிருக்கும் வீடாகத் தான் நினைப்பேன் !" என்றான்.

"அப்படியானால் நீயும் உன் நெற்றியில் சுண்ணாம்பு அடித்துக் கொள் !" என்று அவன் நெற்றியிலும் திருநீற்றைப் பூசி அனுப்பி வைத்தார் வாரியார்.

★ ★ ★

மனித ஆத்மாவுக்கு ஆபத்து வரும்போது பொய் பேசலாம். தப்பில்லை. இது ஆண்டவன் நமக்கு வகுத்துக் கொடுத்த நியதியாகும்.

★ ★ ★

விமானத்தில் பறப்பவனுக்கு பூமியில் இருக்கும் மேடு பள்ளம் தெரியாது. அதுபோல் உயர்ந்த குணங்கள் உடையவனுக்கு சாதி, மத பேதம் கிடையாது.

★ ★ ★

### நோய்க்கு மருந்து

"சிவாய நம" என்ற ஐந்து எழுத்தை உச்சரித்து திருநீறு அணிந்தால் நோய் வராது.

ஒரு நாளைக்கு நூறு பேருக்கு மேல் 'சிவாய நம' என்று கூறி திருநீறு வழங்குகிறேன். அந்த பாக்கியம் எனக்குக் கிடைத்து இருக்கிறது.

★ ★ ★

மூக்கு ஏன் வாய்க்கு மேல் படைக்கப்பட்டு இருக்கிறது? வேறு எங்கேயாவது இருந்தால் என்ன.

சில வீடுகளில் இரு வேளை சமையல் செய்வார்கள். சில வீடுகளில் மதியம் ஆக்கியதை இரவு சூடு படுத்துவார்கள். ராத்திரி சூடு பண்ணவில்லை என்றால், வாய் அருகே கொண்டு போன கணவன் கேட்பான் இன்றைக்கு சூடு பண்ணவில்லையா என்று.

வாட்ச்மேனுக்கு லஞ்சம் கொடுத்து உள்ளே போகிறமாதிரி, சாப்பாடு உள்ளே போகாது. வாயோடு சம்பந்தப்பட்டு இருப்பதால் மூக்கு, வாய் அருகே இருக்கிறது.

★ ★ ★

### புத்திசாலி சிவன் !

வரதட்சணை எனும் ஆசை பிடித்தவனுக்கு எவ்வளவு கொடுத்தாலும் அடங்காது. ஆகவே தான் சிவபெருமான் கூட இதனை முன்னமே அறிந்து பெண் குழந்தை பெற்றுக் கொள்ளவில்லை.

★ ★ ★

### ஆசி கூற

திருமண காலத்தில் மணமக்கள் மீது அட்சதை தூவும் காரணம் அவர்களுக்கு ஞானம் என்ற மூளை தோன்றட்டும் என்று தான். குத்தாத–கையினால் உரித்த அரிசியில் அட்சதை தயாரித்து மக்கள் மீது இட்டு ஆசி கூற வேண்டும். உலக்கையால் குத்திய அரிசியில் தயாரித்தது அட்சதையாகாது.

★ ★ ★

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் சுமார் இருபது வருடங்களுக்கு முன் மலேஷியா சிங்கப்பூர் விஜயத்தின் போது கோலாலம்பூரில் கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவை முடித்துக் கொண்டு சிங்கப்பூரிலும் அதே தொடர் உபாக்கியானத்தை ஆரம்பித்தார்கள். சிங்கையில் 3ம் நாளன்று சொன்ன ஒரு நயமான விஷயம்.

"நான் சென்னையிலிருந்து மலேஷியாவுக்குப் புறப்படும்போது கம்பராமாயணப் புத்தகங்களில் நூறு பிரதி எடுத்து வந்தேன். கோலாலம்பூர் ரசிகர்கள் நான் முந்தி நீ முந்தி என்று வாங்கினார்கள், இரண்டே நாட்களில் 75 பிரதிகள் விற்பனையாகி விட்டன. அத்துடன் விற்பனையை நிறுத்திக் கொண்டு பாக்கியிருந்த 25 பிரதிகளை சிங்கப்பூருக்குக் கொண்டு வரச் சொன்னேன். எனக்கோ உள்ளூற பயம். கோலாலம்பூரைவிட சிங்கப்பூரில் ரசிகர்கள் அதிகமாயிற்றே, தமிழன்பர்களுக்கு 25 புத்தகங்கள் எப்படிப் போதும் என்றெல்லாம் எண்ணினேன். ஆனால் நேற்று (2ம் நாள்) புத்தகம் விற்றுக் கொண்டிருப்பவரை எத்தனை புத்தகங்கள் விற்பனையாயின என்று விசாரித்தேன். அவர் இதுவரை 5 புத்தகங்கள் தான் விற்றிருக்கின்றன என்றார். இது எதைக் காட்டுகிறது?" ... (இங்கு சில நொடிகள் நிறுத்திவிட்டு வாரியார் சுவாமிகள் மேலும் சொன்னார்கள்)

"இது எதைக் காட்டுகிறது என்றால், சிங்கப்பூர் ரசிகர்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் கம்பராமாயணப் பிரதி இருக்கிறது என்பதைக் காட்டுகிறது !" என்றார்கள்.

★ ★ ★

உலகில் இல்லாதவர்கள் தான் அதிகம். இருப்பவர்கள் குறைவு. அறிவு இருப்பவர்கள் குறைவு. அறிவு இல்லாதவர்கள் அதிகம்.

★ ★ ★

சில கணவனும் மனைவியும் எலியும் பூனையுமாக இருக்கிறார்களே ஏன் தெரியுமா? இருவரும் பூர்வ ஜென்மத்தில் அரசியல்வாதிகளாக இருந்திருப்பார்கள்.

★ ★ ★

சாஸ்திரங்களைப் படிக்காதீர்கள். படிப்பது நாக்கு. ஓதுவது உணர்வு "அவனை அழைத்து வா" என்பதற்கும் "இழுத்துவா" என்பதற்கும் உள்ள வேறுபாடு போல.

★ ★ ★

வியாபாரிகள் தங்கள் கடைகளில் லட்சுமி, சரஸ்வதி, சிவன், முருகன் படங்களையும் மற்றும் 'மாடர்ன் ஆர்ட்' படங்களையும் கூட மாட்டி வைக்கலாம். ஆனால் ஒரே ஒரு படம் மட்டும்தான் இருக்கக்கூடாது. அது என்ன? அது தான் கலப்படம்.

★ ★ ★

மனம், வாக்கு, காயம் ஆகிய திரி கரணங்களாலும் நாம் கருமத்தைச் செய்கிறோம். மனத்தால் நினைப்பதாலும், வாக்கால் கவனிப்பதாலும், காயத்தால் ஒன்றைச் செய்வதாலும் நாம் பாவ புண்ணியங்களைச் செய்கின்றோம். மனமடங்கி விட்டால் ஜன்மமே ஒழிந்துவிடும்.

★ ★ ★

மனிதனை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்

முதல் வகை – சந்தனக் கட்டை

சந்தனக் கட்டை எப்படி தான் தேய்ந்து பிறருக்கு மணம் கொடுக்கிறதோ, அதுபோல தன்னை வருத்தித் தியாகம் செய்து பிறருக்காக வாழ்பவன் முதல் வகை.

இரண்டாவது வகை–பசு.

பசுவிற்கு நாம் எந்த அளவிற்கு உணவு கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு அது பால் கொடுக்கும். அது போல தனக்கு என்ன ஆதாயம் கிடைக்கிறதோ அந்த அளவுக்கு உழைப்பவன் இரண்டாவது வகை.

மூன்றாவது வகை – மயில்

தானாக பிடித்துத்தான் இறகைப் பிடுங்க வேண்டும். அது போல இந்த வகை மனிதனை நாமாகப் பணியாற்ற வைக்க வேண்டும்.

நான்காவது வகை–தேள்

நன்மை செய்யவிட்டாலும் தேள் கொட்டும். அது போல இந்த வகையினர் நன்மை செய்யாமல் தீமை செய்வார்கள்.

★ ★ ★

எல்லா தெய்வங்களும் தங்கள் எதிரிகளை அழித்தனர். இராமன் இராவணனையும், சிவன் மன்மதனையும், கிருஷ்ணன் கம்சனையும் அழித்தார்கள். ஆனால் முருகன் மட்டும் தன் எதிரி சூரபத்மனை அழிக்கவில்லை. சேவலாகவும், மயிலாகவும் அவரை வைத்துக் கொண்டார் ! சூரபத்மனை முதலில் உயிருடன் இருக்கும்போது எல்லோரும் மயக்கத்தினால் வணங்கினார்கள். சேவலும் மயிலும் ஆன பிறகு எல்லோரும் பக்தியோடு வணங்கினார்கள்.

★ ★ ★

பணிவு என்ற பண்பு உன் வாழ்க்கையின் உயிர் நாடி பணிவு இன்றி வாழ்பவனுடைய வாழ்க்கைத் தரம் நிச்சயமாக உயர்வடையாது. அடக்கமே உன்னை அமரனாகச் செய்யும். அதுவும் இளமையில் அந்த அடக்கம் வருவது பொன் மலர் நாற்றமுடைத்தது போலும்.

இராக் காலத்திற்கு வேண்டியதை பகலில் தேடி வைத்துக்கொள். மழைக்காலத்திற்கு வேண்டியதை மற்றைக் காலத்தில் தேடி வைத்துக்கொள். முதுமைக்கு வேண்டியதை இளமையில் தேடிக்கொள். மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடிக்கொள்.

★ ★ ★

மன்மதன் சேனைகள் பத்து வகை.

1. காமம்,
2. வெறுப்புடைமை,
3. பசி, தாகம்
4. உணவு முதலியவற்றை அடைவது, அடைய முயற்சி செய்வது,
5. மன உறுதியின்மை
6. அச்சமுடைமை
7. ஐயப்பாடு உடைமை,
8. நற்குணங்களை மறப்பது, நல்லுபதேசங்களை மதியாதிருப்பது,
9. பொருள் ஆசையும், கர்வமுடைமையும்,
10. தன்னைப் பெரிதாக மதித்து மற்றவரை அவமதிப்பது

★ ★ ★

பலர் பெண்களால் துன்பமின்றி இன்புறலாம் என்று எண்ணுகிறார்கள். திருமணம் ஆவதற்கு முன் மாணவர்கள் பள்ளியில் படித்த பொழுது இருந்த இன்பத்தில் கல்யாணமான பின் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இருக்காது என்பதை அனுபவசாலிகள் அறிவார்கள். எப்படிப்பட்ட நிலையிலும் நிரந்தர இன்பம் என்பது இறைவன் திருவடி ஒன்றே ஆகும்.

★ ★ ★

ஒரு கஜ நீளம், ஒரு கஜ அகலம், ஒரு கஜ ஆழம், உள்ள ஒரு குழி தோண்ட ஒருவருக்கு 64 ரூபாய் கொடுக்க வேண்டும். கால் கஜ நீளம், கால் கஜ அகலம், கால் கஜ ஆழம் உள்ள ஒரு குழி தோண்ட அவருக்கு எத்தனை ரூபாய் கொடுக்க வேண்டும்? சாதாரணமாக யோசித்தால் 16 ரூபாய் என்போம். ஆழமாக யோசித்தால் தான் தெரியும் 1 ரூபாய் தான் கொடுக்க வேண்டும் என்பது. அதனால் எதையுமே ஆழ்ந்து யோசிக்க வேண்டும்.

★ ★ ★

மாப்பிள்ளைகளே ! உங்களை மாமனார்கள் "மாப்பிள்ளே.... மாப்பிள்ளே......" என்று செல்லமாக பிரியமாக, மரியாதையாகக்

கூப்பிடுவதாக நினைத்துப் பூரிப்படையாதீர்கள்.

மா என்றால் "பெரிய !"

பிள்ளை என்றால் 'கழுதை !"

மாப்பிள்ளை என்றால்"பெரிய கழுதை" என்று அர்த்தம், இப்போது புரிகிறதா?!

★ ★ ★

**பட்டினத்தார் திகைப்பு !**

பட்டினத்தாருக்கு நெடுந்தூரம் நடந்து வந்த களைப்பு. கையை தலைக்குக் கீழ் வைத்துக் கொண்டு வரப்பில் படுத்துக் கொண்டார்.

"இங்கே பாருடீ!, பாவம், ஒரு சாமியார் இப்படிக் கட்டாந்தரையில் படுத்துக் கொண்டிருக்கிறார் !" ஒரு பெண் தன் தோழியிடம் இப்படிச் சொன்னாள்:

"இவர் உண்மையான சாமியாராக இருந்தால் தூங்குவதற்கு கையை தலையணையாகக் கொண்டிருப்பாரா? தலையணையைத் துறக்க மனம் இல்லையே?" இப்படிச் சொன்னாள் தோழி. பின்னர் இருவரும் தண்ணீர் சுமக்கச் சென்று விட்டனர்.

"நாம் தவறு செய்து விட்டோம். நல்லவேளை, பெண்ணொருத்தி சுட்டிக் காட்டினாள்" என்று எண்ணிய பட்டினத்தார் கையை எடுத்துவிட்டு, வெறுந்தரையில் கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தார். இப்பொழுது அந்தப் பெண்கள் தண்ணீர் சுமந்து கொண்டு திரும்பி வந்தனர்.

"பார்த்தியாடி ! இவர் சாமியார்தான். இப்போது தலைக்குக் கையை வைத்துக் கொள்ளாமல் படுத்திருந்திருக்கார்" என்றாள் முன்னவள்.

"வழியில் போகிறவர், வருகிறவர்கள் ஆயிரம் பேசிக் கொள்வார்கள்... அதையெல்லாம் கேட்டு நடக்க முடியுமா? நாம் சொன்னதைக் கேட்டுத் தலைக்கு வைத்திருந்த கையை எடுத்து விட்டாரே.... இவர் ஒரு சாமியாரா?" தோழி சொல்ல, பட்டினத்தார் திகைத்து போனார் !

★ ★ ★

## MAHATMA GANDHI

Mahatma Gandhi was perhaps the most successful of all national leaders of recent times. He exploded the myth among modern researchers that Hinduism is an essentially personal religion. His commitment to the faith and its attendant feelings for fellow-men enabled him to give Hinduism a political, social and economic dimension. Thanks to his spiritual genius amply displayed during the freedom struggle, the integrity of the nation remained almost intact despite severe strains. His conception of a vast country knit together as a federation of village republics may not have had legal sanction. He did yearn to retain the beauty and simplicity of the religious life and the village as the unit was the experience of history. He dreaded the possibility of total alienation and the dehumanised forms that is experienced by some advanced countries. Independence however, demanded the formalities of constitution making to herald the birth of a nation. And this may have stood in the way. But Gandhiji's dream gained be facto status when he himself became the symbol of national ethos. This enabled his followers to boldly declare the country a secular republic. They were convinced that native religiosity would not surrender to alien values.

*M. Gnanapragasam*

## EFFECTIVE LEADERSHIP

Constitution and other legal safeguards are of mere secondary significance compared to the role of effective leadership. The latter refers to charismatic figures that could speak with authority at all levels of human activity be it politics, economic activity, the school or the family. Men are spurred into honest and creative activity by the example and guidance of developed souls. Human institutions are made to tick by the presence of this sacred lineage. Other wise social arrangements become far too formal to be of meaning and value. These external forces are significant only to the extent of the given in human affairs. They constitute the mere tools with which human will- power seeks to shape the course of events for history in the final analysis is man-made. We are, what we will to be. Anything short of such self- confidence reduces men to mere chattel, exposing them to the vile manipulations of crafty ones.

*M. Gnanapragasma.*

# இதயங்கள் பேசுகின்றன

மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி" சைவப் பெருமக்கள் மத்தியில் எத்தகைய இடத்தைப் பிடித்திருக்கிறது என்பதை அவர்கள் அனுப்பி வைக்கும் கடிதங்களிலிருந்து அறியக் கூடியதாக இருக்கிறது. தனது வளர்ச்சிப் பாதையில் மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் "இந்து ஒளி" மேலும் பிரகாசிக்க வாழ்த்தி பல இதயங்கள் பேசியிருக்கின்றன.

தொடரும் காலங்களிலும், பயனுள்ள அம்சங்களுடன் இறையருள் துணை கொண்டு "இந்து ஒளி" சுடர் விட்டுப் பிரகாசிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இதயங்கள் பேசியவற்றிலிருந்து சிலவற்றை இங்கு தருகிறோம்.

## இந்து ஒளியே வாழ்க

இந்து ஒளியே என் இதயத் தாரகையே
கந்தாயம் தோறும் வந்து கலக்குகிறாயுள்ளமதை
தேன் சொட்டும் கட்டுரைகள் திகட்டாத அறிவுரைகள்
மின்னலெனக் கண்பறிக்கும் மேலான சித்திரங்கள்
பளபளப்பான மேனிபகட்டான கட்டமைப்பு
இளமைத்திறங் கொண்டு இன்பம் பல வீந்து
படிப்பவர் உள்ளமதை பளிச்செனவே கவர்ந்து
அடியெடுத்து வைத்து அன்னநடை போடுகிறாய்
தலை நகரில் பிறந்து தமிழ் பேசுமிடமெல்லாம்
விலையாகி நிதிநிலையை வெற்றி பெறவைக்கிறாய்
கட்டுரையின் தரம் காணாது இன்னும் வேண்டும்
திட்டமிட்டு முன்னேற சேவிக்கிறேன் முதல்வனை.

- விபுலானந்ததாசன்

*கல்லடி – உப்போடை*
*மட்டக்களப்பு.*

இந்து ஒளியை வாசித்து நன்கு களிப்படைந்தேன். உங்கள் சேவை சைவர்களாகிய எங்களுக்கு பெரும் பாக்கியம். நல்ல பல விஷயங்களை தேடிப் பதிப்பித்துள்ளீர்கள். இந்து ஒளியின் வளர்ச்சிக்கு எனது வாழ்த்துக்கள்.

- க. நடராசா

*செங்குந்தா வீதி*
*திருநெல்வேலி கிழக்கு*
*யாழ்ப்பாணம்.*

"இந்து ஒளி' சஞ்சிகை மிகப் பெறுமதிமிக்க விஷயங்களைக் கொண்டிருப்பதுடன், மிகக் கவர்ச்சியாக – சிறப்பான அச்சுப் பதிவில் தரமான தாளில் அச்சிடப்பட்டுள்ளது. 'இந்து ஒளி' நம்நாட்டு இந்து மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம். சிறப்பான வளர்ச்சிக்கு இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

- கே. எம். வாசகர்

*கன்னன்குடா*
*மட்டக்களப்பு*

'இந்து ஒளி' சஞ்சிகையை வாசித்து நானும், இன்னும் பலரும் பயன்பெற்று வருகிறோம். நல்ல, தரமான விடயங்களைத் தாங்கி வெளிவரும் 'இந்து ஒளி' சிறப்பாக வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

- சி. கணேசன்

*பெரிய தோட்டம்*
*மீசாலை தெற்கு, மீசாலை.*

## கட்டிடப் பூர்த்தி சிறப்பு மலர்

மாமன்றத் தலைமையகக் கட்டிடப் பூர்த்தி சிறப்பு மலர் பிரதிகளை மாமன்றத் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம். இலங்கைத் திருத்தலங்கள், இலங்கையின் இந்துப் பெரியார்கள் சம்பந்தப்பட்ட வரலாறுகள் மற்றும் இலங்கையில் இந்து மதம், இறைவழிபாடு, இந்துமத ஸ்தாபனங்களின் பணிகள் தொடர்பான கட்டுரைகள் மற்றும் கவிதைகள், அழகிய படங்கள் என்பவைகளைத் தாங்கியுள்ள சிறப்பு மலர் ஒரு பிரதி ரூபா 150/-வீதம் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெறுவதானால், ரூபா 175/-க்குரிய காசுக் கட்டளை அல்லது காசோலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். (பணம் பெறுபவர் பெயர் - அகில இலங்கை இந்து மாமன்றம் என்று எழுதப்படவேண்டும்).

## இந்து ஒளி

மாமன்றத்தின் காலாண்டிதழான இந்து ஒளி மாணவர்களுக்கும், ஏனையோருக்கும் பயன்படத்தக்க - இந்து சமய தத்துவங்களை விளக்கும் கட்டுரைகள், கவிதைகளுடன் வெளிவருகிறது. பிரதி ஒன்றின் விலை ரூபா 20/-. வருடாந்த சந்தா ரூபா 80/-. சந்தாப்பணத்தை அனுப்பி வைத்து, தபால் மூலமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இதுவரை வெளிவந்த "இந்து ஒளி" சஞ்சிகையின் பின்வரும் வெளியீடுகள் எங்கள் கைவசம் உண்டு. பாடசாலைகள், நூலகங்கள் மற்றும் இந்து மக்கள் அனைவரும், எங்களுடன் தொடர்புகொண்டு தேவையான பிரதிகளைப் பெறறுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1997 | ஆடி - புரட்டாதி | - | தீபம் - 1, சுடர் - 4. |
| 1997 | ஐப்பசி - மார்கழி | - | தீபம் - 2, சுடர் -1. |
| 1998 | தை - பங்குனி | - | தீபம் - 2, சுடர் - 2. |
| 1998 | சித்திரை - ஆனி | - | தீபம் - 2, சுடர் - 3. |
| 1998 | ஆடி - புரட்டாதி | - | தீபம் - 2, சுடர் - 4. |

## GLORIES OF SHAIVAISM

சைவப் பெரியார் எஸ். சிவபாதசுந்தரம் அவர்களால் எழுதப்பட்ட மேற்படி நூலை மாமன்றம் மறுபதிப்பாக வெளியிட்டுள்ளது. பிரதி ஒன்றின் விலை ரூபா. 30/- (தபாற் செலவு ரூபா 5/-)

## இந்து ஒளி - ஆக்கங்கள் தேவை

"இந்து ஒளி" சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக உங்களிடமிருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம். இந்து சமய அறிவைப் புகட்டும் - இந்து சமய தத்துவங்களை விளக்கும் கட்டுரைகள், கவிதைகள் என்பவைகளை அனுப்பி வைக்கலாம். மாணவர்களும் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.

## இந்தச் சுடரில்......


1. பஞ்ச புராணங்கள்
2. ஞான விளக்கம்
3. பண்பாட்டுச் சுடர்கள்
5. சிவாலயங்களின் அமைப்பும் வழிபாட்டு முறைகளும்
9. சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம்
11. மாரித்தாயே வந்தருள்வாய்
12. யார் பெரியவர்?
15. கந்தபுராணம் ஆற்றுப்படுத்தும் கந்தவிரதம் மூன்று
18. நாட்காட்டி
20. தல தீர்த்த யாத்திரைகளின் பயன்
21. சைவ சித்தாந்தம் கூறும் மோட்சம்
22. எழுமின் விழிமின்
25. *From Kailasa to Kataragama*
30. கவலை தீர்க்கும் கந்தன்
31. வாரியார் பேசுகிறார்
36. இதயங்கள் பேசுகின்றன


அடுத்த சுடர்

வெகுதானிய வருடம்
தை – பங்குனி

### வாழ்த்து

பாரினிலுள்ளோ ரெல்லாம் பக்தியும் அன்பும் பொங்கிச்
சீரிய செல்வம் பெற்றுச் சிறப்புட னினிது வாழ்க
காரிருட் கமலக் கண்ணன் கனவிலும் காண வொண்ணாப்
பேரருளாளன் பெம்மான் மலரடி வாழ்த்தி நிற்பாம்.

# இந்து ஒளி


அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஐப்பசி – மார்கழி இதழ்



ஆசிரிய குழு :
திரு. ஆ. குணநாயகம்
திரு. இ. சிவகுருநாதன்
திரு. க. இராஜபுவனீஸ்வரன்
திரு. கந்தையா நீலகண்டன்



| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 20.00 |
| வருடாந்தச் சந்தா | ரூபா | 80.00 |
| வெளிநாடு வருடச் சந்தா | டொலர் | 10.00 |



அகில இலங்கை இந்து மாமன்றம்
A. C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 2. இலங்கை.
தொலைபேசி எண்: 434990; பாக்ஸ் எண்: 344720.



இந்துஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.


## HINDU OLI


Aipasi - Markazhi Issue of
ALL CEYLON HINDU CONGRESS
1998.



**Editorial Board :**
Mr. A. Gunanayagam
Mr. R. Sivagurunathan
Mr. K. Rajapuvaneeswaran
Mr. Kandiah Neelakandan



| | | |
|---|---|---|
| Price | Rs. | 20.00 per copy. |
| Annual Subscription | Rs. | 80.00 |
| Foreign Subscription (Including Postage) | U. S. $ | 10.00 |



ALL CEYLON HINDU CONGRESS,
A. C. H.C. BLDG.
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha,
Colombo - 2, Sri Lanka.
Telephone No.: 434990; Fax No: 344720.


Next Issue :
*THAI - PANKUNI*


*Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.*



Printed By: Unie Arts (Pvt) Ltd., Colombo - 13.